23

C. 14685

THE TANJORE MAHARAJAH SERFOGI'S SARA...

248

TANJORE

உ

கடவுள் துணை

உபன்னியாசங்கள்

இஃது

விருதுநகர், மகா-ா-ா-ஸ்ரீ

சி. ச. சுப்பைய நாடாரவர்களால்

விருதுநகர் நாடார் கல்விச் சங்கத்திலும், இந்துப் பெண் பாடசாலை வருஷக் கொண்டாட்டங்களிலும் உபன்னியாசிக்கப்பெற்றதை

விருதுநகர், ஸ்ரீமாந்

இராமலிங்கக் குருக்களவர்களால்

தமது

சச்சிதானந்த அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1929.

கல்வி

சர்வ வல்லமையுள்ள கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட ஜீவராசிகளில் மானிடப்பிறவிதான் விசேஷமானது, இப்படி மேலாகிய பிறவி கிடைத்தும் இம்மை, மறுமைப்பயனை அடைவதற்கு ஏதுவான காரியத்தைத் தெரிந்து, அதை விர்த்திசெய்ய வேண்டியதை மறந்திருப்பது பிறவியின் விசேஷத்திற்குப் பொருத்தம் ஆகுமா?

உடலுக்கு "உயிர்" எவ்வளவு அவசியமோ இது போலவே உயிருக்கு "கல்வி" அவசியமாகிறது, கல்வி விசேஷமிருந்தால்தான் இம்மை, மறுமைப்பயனை அடைவதற்கு ஏதுவாகும்.

பூர்வம் இந்தியாவை அநேக சிற்றரசர்களால் ஆளப்பட்டகாலங்களில் ஜனங்கள் அடைந்த கஷ்டத்தையும், இப்பொழுது மாக்ஷிமை தங்கிய ஆங்கிலேயரால் ஆளப்பட்டுவருவதில் அடைந்துவரும் நன்மையையும் நோக்கிப்பார்த்தால் அணுவுக்கும் மகாமேருவுக்குமுள்ள வித்தியாசம்போ லிருக்கிறது. சிறிய கிராமமுதல், சுகாதார விஷயமும் மற்றதுங் கவனிக்கும்படி யூனியன் முதலானது ஏற்படுத்தியும் ஒவ்வொரு இடத்திற்கும் போக்குவரத்துக்கு ரோட்டு உண்டுபண்ணியும், கல்விச்சாலைகளும், வைத்திய சாலைகளும் ஏற்படுத்தி விவகாரங்கள் ஒரு கோர்ட்டில் முடிவாகுவதுதான் என்பதில்லாமல் மேலுக்கும்போய்ப் பார்க்கலாமென்ற வசதியையும்செய்து இன்னும் ஜனங்களுக்காகவும், ஜனங்களின் ஆதாரத்திற்கான சாமான்கள் போக்குவரத்திற்காகவும் அதிசீக்கிரமாய்ச் செல்லும்படியான ரயில், கப்பல் முதலானதுகளை ஏற்படுத்தியும், விவசாயமில்லாது கிடந்த நிலங்களைத் திருத்தியும், பிரயோஜனமில்லாது போய்க்கொண்டிருந்த தண்ணீர்களை விளைநிலங்களுக்குத்திருப்பியும், விளைபொருள் சாமான்கள் அதிகப்படும்படியும் செய்து நாட்டில், பஞ்சம் வாராதிருக்கும நிலைமையாகவும் ஜனங்கள் ஒருவர்க்கொருவர் சச்சரவின்றி வசிக்கவும், கன்னியாகுமரியிலிருந்து இமையகிரிவரைக்குமானாலும், விபரந்தெரிந்த குழந்தை முதலாக யாதொரு பயமின்றி சௌகரியமாய் போய்வருவதற்கு வசதியும் உண்டுபண்ணியிருப்பதோடுங்கூட இராஜபாஷையை எல்லோரும் படிக்கலாமென்றும், படித்தவர்களில் யாரும் உத்தியோகம்செய்யலாமென்றும், ஏற்படுத்தியிருக்கிறார்களே இதனுடைய அருமையென்ன, இவர்களின் கல்வி விசேஷத்தாலல்லவா? ஒரு கண்டத்திலிருந்துகொண்டு இந்தக் கண்டத்தையும்

இன்னும் மற்றக் கண்டங்களையும், ஒற்றுமையோடு கண்ணை இமை காப்பதுபோல் பாதுகாத்துவரக்கூடியதா யிருக்கிறது.

இப்பேர்ப்பட்ட அருமையான காலத்திலுங்கூட நாம் கல்வியென்றால் கசக்குமென்ற வாய்ப்பாடமுள்ளவர்களாய் கண்டம் பலவில்லாவிட்டாலும், தங்கள் தங்கள் குடும்பங்களையாவது ஒற்றுமைப்படுத்தி வருமானத்திற்குத் தகுந்தபடி செட்டாய்ச் செலவு செய்து பாதுகாக்கத்தெரியாமல், முக்கியமாய்ப் பிரேதத்திற்கு அலங்கிருதஞ் செய்து அதை வெகுதூரம் தூக்கி சுற்றிச் சுமப்பதோடு சிலருக்கு மதுபானமூட்டி ஆடிவரச்செய்து களிப்படையக்கூடிய தன்மையுள்ளவர்களா யிருக்கிறோம். வாஸ்தவத்தில் கல்வி விசேஷமிருக்குமானால், இப்படி அனுவசியமான காரியங்களை விசேடிக்கவும், மதுபானமூட்டியாடிவரச்செய்யவும் இதுவிஷயத்தில் அவர்கள் இணங்கி ஆடும்படியாகவும் ஏற்படுமா? சாதாரணமாய் கோர்ட்டுகளில் கேசுகள் பைசல் ஆவதற்குப் பெரும்பாலும் இரண்டுமூன்று வருஷத்திற்கு மேலும் ஆகிறது, இதுவும் கேசு அதிகத்தினாலல்லவா சுணக்கமாகிறது. இப்படிக்கேசு அதிகப்படுவதற்குக் காரணம்; முறைதெரியாது கடன் கொடுப்பதும், வாங்குவதும் இன்னும் மற்றதுகளுமே, கல்வி விசேஷமில்லாதபடியால்தான் முறையில்லாதபடிநடந்து ஆபாசமான காரியங்களில் தலையிட்டுக்கொள்ளவும் பிரயாசையாய்த் தேடிய பொருள்களை கோர்ட்டுச் செலவுகளிலும், இன்னும் மற்ற ஆபாசமான காரியங்களிலும் போக்கக்கூடியதாயிருக்கிறது; ஐரோப்பா முதலிய நாகரீகமான தேசங்களில் வரும்படிக்குமிஞ்சிச் செலவுசெய்து, கடன் படல் வெகு சொற்பம். மேலும் அந்தத் தேசங்களில் சிவில் கிரிமினல் கேசுகளும் அதிகம் கிடையாது அவர்களெல்லாம் பிள்ளைகளுக்குக் கல்வியென்னும் அழியாத ஆஸ்தியைத்தான் கட்டாயமாய்ச் சேர்த்து வைக்கிறது வழக்கம்.

படித்தவர்களுக்கும், படியாதவர்களுக்கு முள்ள வித்தியாசம் ஆண்டவனுக்கும், அடிமைகளுக்கு முள்ளதைப்போ லிருக்கிறது. தவிரவும் நாம் விளைபொருள் செய்வதிலுண்டான பஞ்சு ராத்தல் ஒன்றுக்கு, ஆறு அணுவாக விற்று முதலாகி அது அன்னியதேசம் போய் துணியாக்கி நம்மிடமே வந்து ஒரு ராத்தல் நிறையுள்ளதை ரூபாய் நாலுக்கு விற்று முதலாகிறதை நாள்தோறும் கவனித்து வியாகூலப்படக்கூடியதா யிருக்கிறதே நாமும் கல்வி விசேஷமுள்ள

வர்களாயிருந்தால் நம்முடைய தேசத்துப்பொருள்கள் அன்னிய நாட்டுக்குப்போய் வறுமை குடிகொண்டவர்களாயிருப்போமா? நம்முடைய நாட்டு ஜனங்களில் அநேகர் சிலோன், பர்மா, பினங்கு, தென்னாப்பிரிக்கா முதலிய இடங்களுக்குப் போய் மிருகத்துக்குச் சமானமாய் நடத்தப்பட்டும் வருகிறார்களே, விளைபொருள் அதிகமுள்ளது நம் இந்தியாவைத்தவிர வேறில்லை. இத்தனை வளப்பம் பொருந்திய நாடாயிருந்தும், நம்மள் நாட்டு ஜனங்களில் அநேகர் வயிறாறப் புசிக்க உணவு தேடிக்கொள்ளமுடியாத சக்தியுள்ளவர்களாயிருப்பதோடு அன்னிய நாடுபோய் மிருகத்துக்குச் சமானமாய் மதிக்கப்படுவது என்ன அனியாயம், நம்முடைய நாட்டிலும் கல்வி விசேஷமிருந்தால் விவசாயம், கைத்தொழில் முதலிய வேலைகள் அதிகப்பட்டு நமக்குவேண்டியசாமான்கள் யாவையும், சகாயப்படும்படி நாமே செய்துகொள்ளவுமாயேற்பட்டுச் சிரேஷ்டர்களாயிருப்பதோடு மிருகத்தைப்போல் நடக்க அன்னிய நாட்டுக்குப்போக வேண்டியது மிராதே.

காலதேச வர்த்தமானங்களை நோக்கி நூதனமான காரியங்களைச் செய்ய அல்லது செய்வோருக்கு ஒத்தாசையாயிருக்காமல் புராதன வழக்கங்களையே அனுசரித்து ஒருவர் பிள்ளையார்கோவில் கட்டினால் மற்றவர்களும் அதேபடிசெய்யவும், ஒருவர் நந்தவனம் உண்டுபண்ணினால் மற்றவர்களும் அந்தப்படியே செய்யவுமாயேற்பட்டால் நாம் முன்னுக்கு வருவதெப்படி? ஒருவர் பிள்ளையார் கோவில்க் கட்டினால், ஒருவர் வைத்தியசாலையை உண்டுபண்ணியும் மற்றொருவர் நந்தவனத்தைச் செய்தால் அதன்பின்னுள்ளவர்கள் வித்தியா சாலையையும் ஏற்படுத்தி தன்னையும், தன்னைச் சேர்ந்தவர்களையும் மேன்மைப்படுத்தலாமே, வாழ்க்கைச்சுகத்தில் ஏற்படும்குறைச்சலை வுத்தேசித்து அதை நிவர்த்திக்கும்பொருட்டு, தெய்வ வழிபாடுசெய்து ஏதாவது தருமம் செய்வதாகச்சொல்லி பிரார்த்தனை கொள்ளுவதத்தனையும், வித்தியா கைங்கிரியமாகயிருக்கட்டுமே இஃதுதான் தெய்வத்துக்குப்பிரியத்தையும், ஜனங்களுக்கு சிலாக்கியத்தையும், உண்டுபண்ணக்கூடியதாகவுமிருக்கிறது.

தெண்டத்தால் தீயால் திருடரால் கொள்ளையினால்
பண்டு பிறந்தார்கள் பங்கினால்—கண்ட
செலவால் வியாதியால் செட்டாலழியாத
பொருளதுவே கல்விப்பொருள்.

என்பதுபோல் செய்யப்படுகிற எந்தவிதத் தருமங்களிலும் கல்வித்தருமந்தான் எக்காலத்தும், எவ்விதத்தாலும், நாசத்தை அடையாது, பெற்றுக்கொண்டவர்களுக்கு எப்பொழுதும் கைப்பொருளாயிருக்கக் கூடியதென்று உறுதி கொள்ளவேண்டும்.

மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனில் கற்றோன் சிறப்புடையோன்—மன்னனுக்குத்
தன்தேசமல்லாற் சிறப்பில்லைக் கற்றோர்க்குச்
சென்ற விடமெல்லாஞ் சிறப்பு.

என்னும் முதியோர் வாக்கியத்திற்கு இணங்கவும், உலகத்தில் "சூரியன்" எத்தன்மையாய்ப் பிரகாசிக்கின்றானோ அதுபோலவே கற்றுத்தேர்ந்தமேதாவிகளின்பேரும், பிரக்கியாதியும், பிரகாசிக்கிறது' "கோபாலகிருஷ்ண கோக்கலே" என்பவர் நம்மைப்போன்ற குடிஜனங்களில் ஒருவர்தானே, அவர் நமக்கு எந்தவிதச் சாதகத்தையும் செய்துவிடவுமில்லை. அதோடு அவரை அநேகர்கண்ணால் பார்த்ததுமில்லை. ஆனாலும் அவர்பேரைக் கேட்டமாத்திரத்தில் அவர்பேரில் நமக்கு எத்தனையோ பிரியமும், விசுவாசமும், ஏற்படுகிறது. இவர் தென்னாப்பிரிக்கா போனதில் அங்குள்ள நம்தேசத்தார்களின் பேரில் கொடூரமாய் நடத்துபவர்களுங்கூட இவருக்கு அன்பும் விசுவாசமும் காட்டி இருந்தார்கள். இதுபோலவே கல்விப் பெருக்குள்ள மேதாவிகளுக்குத்தான் சீரும் சிறப்பும் கிடைக்கக் கூடியதாயிருக்கிறது.

செல்வம் பெறலாநற் செங்கோல் செலுத்திடலாம்
நல்வர்த்தகங்கள் நடத்தலாம்—பல்வகையா
நெல்விளையும் பூமிபெலா நேர் திருத்தியுண்டிடலாம்
கல்வி நலனிருந்தாக்கால்

என்னும் வாக்கியத்துக் கிணங்கவும், கல்வி விசேஷமிருந்தால்த்தான். எவ்விதத்திலும், நாம் சிலாக்கியத்தை அடையலாமென்று சத்தியமாய் அறியவேண்டும்

நம் வாழ்க்கையில் நமக்கு உயிர்த்துணையானது "மனைவி" இவர்களோடு கூடிக்காலங் களிப்பதில் படித்த ஆணும் படியாத பெண்ணுமா யேற்பட்டால் அக்குடும்ப பாரமானது, ஒரு வண்டியில், ஒரு காளை மாட்டையும், ஒரு கழுதையையும் பூட்டி நடத்துவது போலாகுமேயொழியவேறு மேன்மையான துண்டா? காசுக்கு ஒரு குதிரையும் வேண்டும் அது காற்றைப் போலவும் பறக்கவேண்டு மென்பது போல பெண்கள் படிக்காம லிருந்துகொண்டு புத்திசாலிகளாகவும் நாகரீகமானவர்களாகவும் இருக்க நினைத்தால் எங்கிருந்து கிடைக்கும் வெளியூர்களிற் போய் வியாபாரம் செய்வதில் அந்த யிடங்களில் திரவியம் காய்க்கும் மரங்களும், மலைகளு மிருப்பதாகவும், இதுகளிலிருந்துதான் திரவியங்கள் எடுத்துக்கொண்டு வருவதாகவும், பெண்கள் நினைக்கிறார்கள், இவர்களும்படித்து புத்திசாலிகளா யிருந்தால் வியாபாரத்தில் நஷ்டம், செலவு, அழிவு, நிலுவைச் சேதாரா முதலானது நீக்கி கூட்டாளிகளிருந்தால், அவர்களுக்குப் பங்கு பிரித்துங்கொடுத்துப் பார்த்தால் வருமானம் வெகு சொற்பமாகத் தான் தேறுமென்று உணர்ந்து கொள்வதோடு கணக்கு பார்க்காமலும், வருமானத்திற்கு மிஞ்சியும் அனுவசியமான காரியங்களிலும் செலவு செய்யப் பிரயத்தனஞ் செய்யமாட்டார்கள். மேலும், மக்களுக்கு மாதாவே துணை யென்பதுபோல சிசுப் பருவமான காலங்களில் தாய்மார்களே துணையாகிறது இதில் தாய்மார்கள் படித்தவர்களாயிருந்தால் குழந்தைகளுக்கு சிசுப்பருவத்திலிருந்தே நடை, உடை, பேச்சு முதலானதுகளை ஆபாசமாகக் கற்பிக்காமல் நாகரீகமாகச் சொல்லிக் கொடுப்பதோடு கல்வி கற்றுக் கொடுப்பதற்குப்போதுமான துணையாகவு மிருப்பார்கள். ஐந்தில் விட்டது ஐம்பதில் வரமாட்டாது என்பது போல் சிசுப் பருவத்தில் கவனிக்காது விட்டது முதுமையில் வரமாட்டாது ஆகையால், சிறுபிராயத்திலிருந்து தான் கல்வி அப்பியாசமாகி வரவேண்டும். சிசுப்பருவத்தில் சம்ரக்ஷணைசெய்து வருவது தாய்மார்களாயிருப்பதால், முக்கியமாய்த் தாய் மார்களாகிய பெண்களும் அவசியம் படிக்கவேண்டிய தாயிருக்கிறது, பெண்கள் படித்தால் புருஷர்களுக்கு அதிகச் சிரமமில்லை. அதோடும் புருஷனுடைய வருமானமறியாமல் வீடு கட்டுவிக்கவும் நகை முதலிய சாமான்கள் வாங்கி வரவும் தொந்தரவு கொடுத்து கடன் படுத்திக்கைதியாக்காமல் வருமானத்திற்குத் தகுந்தபடி குடும்ப காரியத்தைச் செட்டாய் நடத்தி வருவதோடு ஆலோசனைக்கு மந்திரியைப் போலவும் ஏற்படுவார்கள் பட்சிகள் எவ்வளவு உயரப் பறந்தாலும் ஆகாயத்திற

குள்தானென்பது போல புருஷர்கள் எவ்வளவு தூரம் பேரியும், எத்தனை பெருமையாக நடந்தாலும் மனைவியிடம் போய் அவர்களை எதிர்பார்க்கவேண்டுமென்பதில் சந்தேகமில்லை, நாம் மேன்மையை அடையநினைப்பதில் நம்முடைய மனைவி முதலானவர்கள் கீழ்மையாய் இருக்கும் வரைக்கும் நம்மை மேலுக்குக் கொண்டு போகவிட மாட்டார்கென்று சத்தியமாய் அறியவேண்டும்.

இதுபோலவே ஒரு ஜாதி அல்லது ஒரு ஊர் முதலிய தேசங்கள் மேன்மையை அடையவேண்டுமானால் அதிலுள்ள சகலரும்பேதமில்லாமல் ஒற்றுமையாகி, நன்மையான விஷயங்களைக் கவனிக்கவேண்டும்: இப்படிச் சகலரும் ஒற்றுமையாகி நன்மையான விஷயங்களைக் கவனிப்பதில் அபிப்பிராயபேதம் வந்துவிடாதபடி மெஜாரிட்டியாரின் தீர்மானத்தை முடிவுக்கு வைத்துக்கொள்ளவேண்டும். மெஜாரிட்டியாரின் தீர்மானத்தை முடிவுக்குக் கொண்டு வராத பக்ஷம் ஒற்றுமைக் குறைச்சல் உண்டாகும்; இப்படி ஒற்றுமைக் குறைச்சல் உண்டானபோது பொதுக்காரியங்கள் செவ்வையாய் நடைபெறாது பொதுக் காரியங்கள் செவ்வைப் படாதபோது மேன்மையை அடையவே முடியாது.

நம்மை ஆளப்படும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரவர்களுங் கூட சிறிய, பெரிய காரியங்கள் அத்தனையையும் மேதாவிகளின் அபிப்பிராயத்திற்கு விட்டு அந்தமுடிவிலும் மெஜாரிட்டியாரின் தீர்மானப்படிதான் நடத்தி வருகிறார்கள்.

ஆகையால் பலவிடங்களிலும் சங்கங்கள் ஏற்படுத்தி சகலரும் போதுமான ஒற்றுமையோடு பொதுக்காரியங்களைக் கவனிப்பதோடு மெஜாரிட்டியாரின் தீர்மானத்துக்குக் கட்டுப்படக் கூடியவர்களாயிருந்தும் சிறிய கிராமமுதல க வித்தியாசாலைகள் ஏற்படுத்தியும் சிறுவர், சிறுமிகளுக்குக் கட்டாயப் படிப்பாக வைத்து ஆண்கள் 10-வது வகுப்புக்குக் குறையாமலும், பெண்கள் 7—வது வகுப்புக்குக் குறையாமலும், படித்துத் தீரவேண்டுமென்பதை ஒவ்வொருவர் மனதிலும் உறுதிப்படுத்துவார்களாக.

II

மன்னுயிரனைத்தும் சிருஷ்டித்துப் பாதுகாத்துவரும் சாக்ஷாத் கடவுளானவர், மனித சீவன்களாகிய நம்மை அறிவை விசாலப்படுத்தி சுகத்தோடும், மேன்மையோடும், வசிக்கும்படி கட்டளையிட்டிருக்கிருரென்று உள்ளங்கை நெல்லிக் கனியைப்போல் தெரிகிறது, அதாவது கடவுளானவர் சரவடிவான சீவன்களுக்கு உபகாரணமாய் பஞ்சபூதங்களையும், அசரவடிவானமரம் புல், பூண்டுமுதலானதுகளையும் உண்டாக்கியிருக்கிருர். இவைகளில் மானிடரல்லாத மற்றப் பிராணிகள் அத்தனையும் கடவுளானவர் உண்டாக்கியிருக்கிற இயற்கைச் சாமான்களை அந்தப்படியாகவே கண்ட விடத்துப் புசித்தும் நின்ற விடத்தில் தூங்கிவிழித்தும் வரக்கூடியதானது எல்லோருக்கும் தெரிந்தவிஷயமே! மானிடர்கள் கடவுளின் ஆக்ஞைப்படி அறிவைவிசாலப்படுத்தி அதற்குத்தக்கபடி இயற்கைச் சாமான்களை சேர்க்கைத் தொழிலால் மேன்மைப்படுத்திப் புசித்தும் வெயில், காற்று, மழை, பனி முதலானவைகளுக்கு ஒதுங்குவதற்காக வீடு முதலானது சட்டிக்கொள்ளுகிறது மிருக்கிறதல்லவா? அறிவை விசாலப்படுத்தாவிட்டால் நெல்லை அரிசியாக்கி நளபாகத்தோடு சமையல் செய்து புசிப்பதும் கிணறு வெட்டி தண்ணீர் எடுத்து உபயோகப்படுத்துவதும் சிங்காரமான மாடமாளிகை கட்டி குடியிருப்பதும் எப்படி ஆகும். இப்பொழுதுங் கூட மலைப்பிரதேசங்களில் வசிக்கும் பழியர்கள் சாதாரணமாய் காய், கனி, கிழங்குகளைத்தின்றும், அகப்படுகிற தண்ணீரைப் பருகியும் மரத்தடி அல்லது குகைகளில் தூங்கியுந்தான் வருகிருர்கள். ஐரோப்பாக் கண்டத்திலுள்ளவர்கள் சேர்க்கைத்தொழிலினுல், ஸ்டீமர், மோட்டார், ரயில், ஆகாயவிமானம், தந்தி, கம்பியில்லாத்தந்தி முதலான எண்ணிறந்த புதுமைகளை உண்டாக்கியும், உணவுப்பதார்த்தங்கள் அதிகப்படுவதற்கு ஏற்பாடுசெய்தும், அகால மரணங்கள் விசேஷிக்காதபடி சுகாதார முறையைத்தெரிந்து மிருப்பது அவர்களின் அறிவு விசேஷமென்று ஆகிறது. இப்படி அறிவு விசேஷத்திற்குத் தக்கபடிதான் சுகபோகங்கள் கூடிக் குறைந்திருக்கிறது. இந்த அறிவானது கல்வியினுல்தான் விசேஷப் படுகிறதென்பதை யாரும் ஆக்ஷேபிக்க முடியாது. இதைச் சோதித்தும் பார்க்கலாம் அதாவது கல்வி வாசனையே யில்லாத மலைப்பிரதேசங்களில் மிருகங்களுக்குச் சமமாய் வசிக்கும் பழியர்களுக்கும் விசேஷமாய் கல்வியையும் தொழிலையும் கற்பித்துக்கொடுத்தால் அவர்களும் ஐரோப்பாக் கண்டத்தவர்களைப் போல் ஸ்டீமர், மோட்டார், ரயில், ஆகாயவிமானம், தந்தி, கம்பியில்

லாத்தந்தி முதலான புதுமைகளை உண்டாக்கியும் உணவு பதார்த்தங்கள் அதிகப் படுவதற்கு ஏற்பாடும் செய்வார்களென்பதில் சந்தேகமில்லை.

இந்தக் கல்வியானது ஆண், பெண், இரண்டு வகையாருக்குமே வேண்டியதாக இருக்கிறது. மனிதருள் ஆண், பெண், இருவகையாருக்கும் இன்பம், துன்பம் சமமாயிருப்பதினால் கல்வியின் விசேஷமானது ஆணுக்காவது அல்லது பெண்ணுக்காவது ஒருவகையாருக்குத்தான் அவசியமென்று கொள்ளப்படாது மனிதரின் இளமைப் பருவங்களில்தான் குடும்பபாரமுதலிய வியாகூலங்கள் தாக்குப்படாமல் கல்வியைக் கற்றுக்கொள்வதற்கு இசைந்ததாயிருக்கிறது. இப்படி இளமைப்பருவமான சிசுக்கள் முக்கியமாய் தாய்மார்களின் சம்ரட்சணைக்குள்ளிருந்தே வரக்கூடியதாயிருக்கிறது. தாய்மார்களாகிய பெண்கள் படித்தவர்களாயிருந்தால் சிசுக்களை வீண் விளையாட்டுக்களில் பிரவேசிக்க விடாமல் நடை, உடை, பேச்சு, முதலியவைகளை நாகரீகமாகத் திருத்தியும் முன்னக்கூடியே பள்ளிக்கு அனுப்பியும் ஆசிரியரைப்போலிருந்து பிள்ளைகளின் பாடங்களைக்கேட்டும் சொல்லிக்கொடுத்தும் வரக்கூடுமல்லவா?

பெண்கள் படித்திருந்தால் புருஷர்கள் வெளியேறிப் போய்ச் செய்துவரும் தொழில்களில் அலுப்புக்கிடமான காரியமாவது, அல்லது நஷ்டத்திற்கிடமான காரியமாவது ஏற்படுமானால் அது விஷயத்தில் அவர்கள் புருஷர்களுக்குத் தேறுதலைச்சொல்லி உண்டி முதலிய காரியத்தில் அன்போடு சப்ளைசெய்து ஆயாசத்தையும் கவலையையும் மாற்றுவார்கள்: முக்கியமாய்படித்து விவேகிகளாயிருந்தால் குடும்ப காரியத்தில் வருமான மறிந்து செலவு செய்ய இசைந்தவர்களாகவும் ஆபாசமான காரியங்களை நீக்கவும் நாகரீகமான காரியத்தைச் செய்ய ஒத்தாசையுள்ளவர்களாகவு மிருப்பார்கள்.

காலதேச வர்த்தமானமானது புதுமையான மாறுதல்களை அடைந்து கொண்டுவரும் இக்காலத்தில் காலத்திற்கேற்றபடி கல்வியை விசேஷப்படுத்தும் வகையை அலக்கழிவு செய்யக்கூடியவர்களெல்லாம் மற்றவர்களின் முன்னேற்றத்திற்கு வெகுதூரம் பிந்தி விடுவதோடு கவர்ன்மெண்டாரவர்களின் சட்டவிரோதமான காரியங்களில் தலையிட்டு ஆபத்தை உண்டாக்கிக் கொள்வார்களென்பதில் சந்தேகமில்லை.

பொதுவாய் கல்வியானது ஜனங்களுடைய விர்த்திக்கும் மேன்மைக்கும் முக்கிய ஆதாரமாயிருக்கு தென்பதை மறக்காமல் ஒவ்வொரு விடங்களிலும் வித்தியாசாலைகளை வைத்து பாலர் பாலகிகளுக்கு கட்டாயப் படிப்பா யேற்படுத்தி ஆண்கள் 10-வது வகுப்புக்குக் குறையாமலும் பெண்கள் 7-வது வகுப்புக்குக் குறையாமலும் படித்துத் தீரவேண்டு மென்பதை உறுதிப்படுத்துவார்களாக.

பெண் கல்வி.

மனிதருள் ஆண், பெண், இரண்டு வகையாருக்கும் இன்பம், துன்பம், சமமாகவேயிருக்கிறது, இதில் இந்து தேசத்தில் தொன்று தொட்டுப் பெண்களைப் படிப்பிக்காமல் அடிமைகளைப்போல் நடத்தப்பட்டு வரக்கூடியதாயிருக்கிறது, இதனால், பெண்களின் அறிவு மழுங்கப்பட்டு தங்களின்தேக சௌகரியத்தின் பொருட்டு சுகாதாரத்தைக் கவனியாமலும், நவீன நாகரீகத்தைக்கையாடாமலும் சதிபதிகளாகச் சேர்ந்து, குடும்பபாரம் நடத்துவது பெரும்பாலும் கீரியும், பாம்பும் சந்தித்த பாவனையாகவே யிருக்கிறது.

பெண்கள் படித்திருந்தால் புருஷர்கள் வெளியேறிப் போய்ச் செய்து வரும் தொழில்களில் அலுப்புக்கிடமான காரியமாவது, நஷ்டத்திற் கிடமான காரியமாவது ஏற்படுமானாலும், அதுவிஷயத்தில் அவர்கள் மனதையும் துர்ப்பலப்படுத்தாமல் புருஷர்களுக்குத் தேறுதலைச் சொல்லி உண்டி முதலியவிஷயத்தில் அன்போடு சப்ளைசெய்து ஆயாசத்தை மாற்றுவார்கள். முக்கியமாய்ப் படித்து விவேகியானவர்களாயிருந்தால். குடும்ப காரியத்தில் வருமான மறிந்து செலவுசெய்ய இசைந்தவர்களாகவும், ஆபாச மானகாரியங்களை நீக்கவும், நாகரீகமான நல்லகாரியத்தைச் செய்ய ஒத்தாசை யுள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

நம்மை ஆளப்படும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரவர்கள் ஜனங்கள் பூராவும் படித்துத்தேறினால் தான் கட்டுப்படாமையும், முரண் செய்கைகளும், அறியாமையும் நீங்கி ஒவ்வொருவர்களும் தங்கள் தங்களின் ஜீவனுமி சத்திற்குப் போதுமான சௌகரியம் தேடிக் கொள்ளுவதோடு இராஜ விசுவாசமும் பலத்துப்போகுமென்று நினைத்துத்தான் நமக்கு கல்வியைப்பற்றி பூரண சிந்தையோடு அளித்து வருகிறார்கள். இதுபோலவே பெண்களை ஆளப்படுவதில் அவர்களுக்கும் கல்வி என்கிற வாசனையை ஊட்டினால் தான் அவர்களிடம் புரு

ஷர்களுடைய விசுவாசம் பலத்து முறணுன செய்கைகளும் அறியாமையான தன்மைகளும், நீங்கி குடும்பகாரியம் வெகு மேன்மையாய் நடக்கு மென்பதில் ஆக்ஷேபணையில்லை.

சிலர், பெண்கள் படித்து உத்தியோகம் செய்யப்போகின்றார்களா வென்றும், படித்த பெண்கள் புருஷர்களுக்குக் கீழ்ப்படிய மாட்டார்களென்றும் அநேகமாய் சுயேட்சையாய்த் திரிந்து கற்புநிலை கெடுவதற்குக்காரணமாகு மென்றும், சிலர், படிக்காத புருஷர்களில் யார்தான் ஜீவித்துக் கொள்ளாமலிருக்கிறார்கள் என்றும் சொல்லுகிறார்கள். மேல்நாட்டிலும் இந்தியாவின் முக்கியமான சிலவிடங்களிலும், சிறிய உத்தியோகத்தில் பெண்கள் அமர்ந்து தானிருக்கிறார்கள் இதையே பிரதானமாகக் கொள்ளவிட்டாலும் படித்த பெண்கள் வேலைமுடிந்த சாவகாசமான நேரங்களில் அயல் வீடுகள் போய் வீண் புறணிபேசி ஒளிபாத சண்டைபை உண்டு பண்ணுமல் சன்மார்க்கமான புஸ்தகங்களை வாசித்தும், நீதிமார்க்கமான நியாயங்களை விரித்துப்பேசியும், பாலர் பாலகிகளுக்கு படிப்பைச் சொல்லிக் கொடுத்தும், சரிபார்த்தும், புருஷர்களுடைய தன்மையும், சமையமும் அறிந்து நடந்து கொள்ளுவதோடு தங்கள் படிப்பின் புத்திதீட் சண்ணியத்தினுல் கற்புநிலையையும் அவரவர்களை பாதுகாத்துக் கொள்வார்களே யொழிய புருஷத்துரோக முள்ளவர்களாக மாட்டார்கள். படித்த பெண்களிலும் ஏதாவது கெட்ட செய்கையுள்ளவர்களாக ஏற்படவும் செய்யலாம் இதைப்பற்றிக் கவனிக்கப்படாது, படியாத பெண்களெல்லாம் கற்புடையவர்களாகவே யிருந்தால் தானே இனிபடிக்கப் போவதில் ஏகதேசம் ஏற்படுமென்பதைப்பற்றி ஆலோசிக்க வேண்டும், இருள் பொருந்திய வீட்டினுள் தீபத்தின் ஒளியைக்காட்டின மாத்திரத்தில் இருள் எத்தன்மையாய் நீங்கிப்போகிறதோ அதுபோலவே பெண்களுக்கு கல்வி என்கிற பிரகாசத்தைக் காட்டினுல்தான் பெண்களைச் சூழ்ந்திருக்கும் மடமைகள் நீங்கி விவேகிகளாவார்கள்.

படிக்காத புருஷர்கள் விஷயமாகவும் சிலது பேசவேண்டியதிருக்கிறது. இந்த வியாசத்தில் பெண்கள் படிக்கவேண்டும் என்பதைப் பற்றிப் பேசுவதால் புருஷர்கள் விஷயமாய்ச் சிலதை மாத்திரம் இங்கு எடுத்துப்பேசுவோம். தற்காலம் புருஷர்களில் படித்த விவேகிகள் உயர்ந்த உத்தியோகத்தில் அமர்ந்தும், பருத்தி அரவை, நூல்நூற்தல் நெய்தல், மாவு அரைத்தல், இரும்பை உருக்கி வார்த்தல், நெல்லை

அரிசியாக்கல், காகிதம் செய்தல், கண்ணாடிச் சாமான்கள் செய்தல், எண்ணெயெடுத்தல் முதலிய யந்திர சாலைகள் வைத்தும், அன்னிய நாட்டு வியாபாரத்திலும், உள்நாட்டு வியாபாரத்திலும் மிகுந்த சிரேஷ்ட முள்ளவர்களாயும், கிருஷி சாஸ்திரப்படி விவசாயத்தை மேன்மையாகவும், நூதனமாகவும் செய்து வரும் இக்காலத்தில் நம்மில் சிலர், படிக்காதவர்களில் யார்தான் ஜீவனை செத்துத்தான் தேவேண்டியதைச் செய்துகொள்ளாம லிருக்கிறார்களென்ற மனப்பால்குடித்து வித்தியா சாலைகளுக்குக்கூடுமான சகாய முள்ளவர்கள யில்லாமல் நேர்விரோதிகளாக ஏற்பட்டு வருவதினாலேதான், சனங்கள் படித்து முன்னேற்ற மடையாமல் அனேகர் தங்கள் தங்கள் பசிநீங்கிப் புசிப்பதற்கு உபாயம் செய்யமுடியாதவர்களாய் பினாங்கு சிங்கப்பூர் தென்னாப்பிரிக்கா, பர்மா, சிலோன் முதலிய நாடுகளுக்குப்போய் படும் அவஸ்தையை நினைக்குந்தோறும் எல்லோருக்கும வருத்தத்தை உண்டாக்காமலிருக்காது. கூலிவேலைக்காக பிறதேசம் போகப்பட்டவர்களெல்லாம் திடகாத்திரமான இளமைப்பருவ முள்ளவர்களாகவே யிருக்கிறார்கள். இவர்களைக் கூட்டிக் கொண்டுபோய் வேலைவாங்குவது சாதாரணமாய் மிருகத்தைப் போலவே நடத்தப்படுகிறது. வேலைக்குப் போன விடங்களில் நல்ல சுகாதாரமும், போதுமான உணவும், ஆடையும் கிடைக்காமையால் வியாதிப்பட்டு அநேகர் சீக்கிரமாக மரித்துப்போகவும் மீதமானவர்கள்பெரும்பாலும் நோயாளிகளாகவே திரும்பிவருகிறார்கள். கூலிவேலைகளுக்காகப்போன விடங்களில் சௌகரியக்குறைச் சல்களிருப்பதை உத்தேசித்து உடனே திரும்பி விடுவதற்கு மார்க்கமுமில்லை, அதாவது கூட்டிக்கொண்டு போகிறவர்கள் ஆடு, மாடுகளைப்போல் தோட்டக்காரர்களுக்கு விலைபேசி விற்றுப் பணத்தைவாங்கிக் கொண்டு வந்து விடுகிறார்கள் இதனால் எப்படியும் கூலிவேலை செய்து வயிறை வளர்த்து விலை கொண்டவன் பாக்கியைத் தீர்த்துக் கொண்டு தான் திரும்பிவரவேண்டியதா யிருக்கிறது. கப்பலில் ஏற்றுமதி செய்யும் இடத்தில் அடையாளம் தெரிவதற்காக புஜத்தில் சூடுபோட்டு வந்ததாகவும் தெரிகிறது இவர்களும் படித்து விவேகிகளானால் இப்படிச் சூடுபோடுவதைச் சகித்தும், மிருகத்தைப் போல் நடந்துகொள்ளுவதற்கும் பிறதேசங்களுக்குப் போக இசைவார்களா! நம்நாட்டாரும் கல்வி வேண்டியது அவசியந்தான் என்று மனதில் கொள்ளுவார்களாகில் அதுபலத்து கொஞ்சகாலத்தில் எல்லோரும் படித்தும் மிகுந்த பணக்காரர்கள் தங்கள் பணத்திற்கு நல்ல வட்டியும் ஏழைசனங்களுக்குப் போதுமான கூலியும் கிடைக்கும் படியா

க கைத்தொழில் களையும் விசேஷமாய் உண்டுபண்ணி சனங்கள் சுகஜீவியாய் வசிக்கப்பார்க்கலாம்.

படித்த பெண்களினும் ஜீவனுமிசத்திற்காக காட்டில் போய் சாணி, விறகு எடுத்தல் முதலிய கடினமான வேலைகளினும், ஆபாசமான காரியங்களினும், பிரவேசிக்காமல் வீட்டிலிருந்து கொண்டே சௌர்ஜையாய் சட்டை, பாவாடை முதலிய சாயான்கள் தைத்தும், கால்குளோஸ், கைக்குளோஸ் முதலியது பின்னியும், படம் வரைந்தும், அப்பளம், வத்தல் முதலியது செய்தும், இன்னும் கையினால் செய்து முடிக்கக்கூடியததத்தையும் செய்து ஜீவிக்க ஏதுக்களிருக்கவே செய்கிறது. திருவாங்கூர் ராஜ்ஜியத்திலும், தஞ்சாவூர் ஜில்லாவிலும், பெண்களால் சேகரிக்கிற வத்தல் தினுசுகளும், அப்பளத்தினுசுகளும். மிகச் சிரேஷ்டமாகி ஏராளமாய் அன்னிய நாடுகளுக்குப் போய் விற்பனையாகிக்கொண்டு வருகிறது. இதனாலே பெண்கள் படித்தால் ஜீவனுமிசத்திற்காக நல்ல உபாயங்களிருக்கிறது தெரிந்து அதில் பிரவேசித்து ஜீவிக்கலாம் என்று தெரிகிறது.

படியாத பெண்களிருக்கு மிடங்களில் சிறுவர்கள் பாடத்தைப் படிப்பார்களானால் அவர்கள் மூர்க்கங்கொண்டு சத்தம் போடாது வெளியே போய் விளையாடு என்று அடித்தும் விடுகிறார்கள். வாஸ்தவத்தில் பெண்களும் படித்திருந்தால் சிறுவர்களுக்கு ஆசிரியர்களைப்போல்நல்ல துணையாயிருந்து பாடங்களைச் சொல்லிக்கொடுத்து மேல் படிப்புக்கு ஒத்தாசை செய்யக்கூடியவர்களாகவு மிருப்பார்கள். இப்படிப் படித்த தாய்மார்களின் ஒத்தாசை பெற்ற சிறுவர்கள் ஒவ்வொரு வகுப்புகளினும் தவறுமல் முதல் தாமாக பாஸ் செய்வார்கள் என்பதில் சந்தேகமில்லை.

இன்னமும் பெண்கள் விஷயத்தில் குழந்தைகளைப் பிறப்பிக்கும் யந்திரமாகப் பாவித்து அசட்டை செய்யாமல் பெண்கள் கீழான நிலைமையிலிருக்கும் வரைக்கும் புருஷர்கள் மேன்மையை அடைய முடியாதென்பதை உறுதியாய் வைத்து பெண்களுக்குக் கட்டாயப் படிப்பாக ஏற்படுத்தி ஒவ்வொரு வர்களுக்கும் 7-வது வகுப்புக்குக்குறையாமல் படித்துத் தீரவேண்டு மென்பதை உறுதிப் படுத்துவது தான் ஆவசியமென்று கொள்ளுவார்களாக.

பால்ய விவாகம்.

கடவுளானவர் மனித சன்மத்தைப் பகுத்தறிவோடு சிருஷ்டித்திருப்பதினால், மனிதர்கள் அறிவை விர்த்திசெய்து உலகவாழ்க்கையில் நன்மையான காரியங்களை அணுகியும், தீமையான காரியங்களுக்கு விலகியும், அடுத்தவர்களுக்கும், மற்றப்பிராணிகளுக்கும் கூடுமான சகாயமுள்ளவர்களாகவும், நடந்து வருவதுதான் பிறவியின் விசேஷத்திற்கு ஒத்ததாகும்.

மனிதவாழ்கையில் பால்ய விவாகம் நடந்து வருவதானது பசுமந்தைகளில், புலிகளிருந்து நாசப்படுத்துவது போலிருக்கிறதே யொழிய வேறுஅற்பமாக நினைக்கப் படாததாயிருக்கிறது.. மனிதர்கள் தங்கள் பின்வாரிசுக்காக வெகு தான தருமங்களைச் செய்தும், கஷ்டமான யாத்திரை செய்தும், கடுமையான நோன்புகளிருந்தும் பிறந்த புதல்விகளுக்கு அறிவை விர்த்திக்கும் படியான கல்வியைச் சிசுப்ப நுவத்திலிருந்து ஊட்டி புத்திசாலிகளாக்கி யௌனகாலத்தில் தங்கள்சம்மதத்துக்கேற்ற நாயகனைத்தெரிந்து எடுத்துக் கொள்ளும்படிக்கான வழக்கங்கள் பெரும்பாலும் இந்தியர்களிடத்திலில்லாமல், பொம்மைகளைப் போல்சிசுப் பருவத்திலேயே நகைமுதலானதுகளால் அலங்கரித்தும், குழந்தைப் பருவத்திலேயே விவாகமும்செய்து விடுகிறார்கள். இதனால் ஏற்படும் கெடுதல்கள் அனந்தமாக இருக்கிறது. பெண்கள் படிக்காமையால், மடமை குடிகொண்ட தன்மையோடும், குழந்தைப் பருவமாக இருப்பதினாலும், விவாகவிஷயமாய் அவர்களிடம் கேட்கவும், அவர்களுடைய சுயேட்சையைக் காட்டவும் முடியாது போகிறது. இப்படி பெண்ணின் வயதையும், சரீரப்பருவத்தையும், புத்தி நுட்பத்தையும், மனப்போக்கையும் அறியாமல் ஏதோ தங்கள்மேல் ஏற்பட்ட சுமையை நீக்குவதுபோல் நினைத்து விவாகம் முடிப்பதில் அநேகம் கடோசிவரைக்கும் ஒற்றுமையில்லாமலும் போய்விடுகிறது. ஏதாவது அற்ப ஒற்றுமையாக இருந்தாலும், அடிக்கடி சண்டைசச்சரவுக்குண்டான குடும்பமாகவேதானிருக்கும். மேலும், விவாகமான மறுதினத்திலேயே மாப்பிள்ளை இறந்துபோனால், பெண்ணின் ஆடை, ஆபரணாதி அலங்கிருதத்தைக்குறைத்தும், நல்ல சுபகாரியங்களுக்குத்தள்ளப்பட்டும், ஆயுசுபரியந்தம் கைம்பெண்ணாகவிருந்துதீருகிறது. சுபகாரியங்களிலாவது, பிரயாணங்களிலாவது கைம்பெண்கள் முன் வந்து விடுவார்களானால், தகப்பன்மார்கள்கூட சர்ணகடூரமாகத்திட்ட ஏற்படுகிறார்கள். உண்ணுமல், தின்னுமல், ஊரம்பலம்ஏறுவதுபோல்,

பெண்கள் புத்தி அறிவதற்கு முன்னடியே மாதா, பிதாக்களின் அறியாமையாகிய கெட்டவழக்கத்தால், கலியாணத்தை முடித்து விட்டு அப்பால், பெண்ணின் தலை விதியென்று சொல்லி விடுகிறார்கள். இவைகளை மாதா, பிதாக்களின் புலைமதியென்று சொல்லவேண்டுமேயொழிய பெண்ணின் தலைவிதியென்று கொள்ளவேபடாது. பெண்கள் குழந்தைப் பருவத்திலேயே மாப்பிள்ளை வேண்டுமென்று மருவி நின்றார்களா? அல்லது பெண்ணின் சம்மதந்தெரிந்து மணமுடிக்க ஏற்பட்டார்களா? ஏதோ பெண்களின் பெயரைவைத்துக் கொண்டு மாதா, பிதாக்கள் பொம்மைக் கலியாணத்தைப் போல் குதூகலம் கொண்டாடும் விஷயம் பெண்களின் கஷ்டகாலமாக முடிவதோடு மாதா, பிதாக்களுக்கு வீண்நஷ்ட மென்பதை உணரப்படாமலுமிருக்கிறது. பெண்கள் பக்குவமானதின் பேரில் விவாகம் செய்யவேண்டியதிருக்க வெகு சொற்பவயசுகளில் செய்யப்படுவதினால், கலியாணச் செலவு பணத்துக்கும், பெண்ணுக்குப் போடுகிறநகைகளின் பணத்துக்கும் மத்திய காலங்களில் ஏற்படுகிற வட்டிநஷ்டங்கள் தாய், தகப்பன் மார்களை அடையக் கூடியதாகவு மிருக்கிறது. பெண்களுக்குப் பால்யப்பிராயத்திலேயே விவாகம்முடிப்பதினால், அப்பெண்களின் வயற்றில் ஜனிக்கும் குழந்தைகள் வெகு சிறுசாகவும், பலயீனமுள்ளதாகவும், மூளை விர்த்தியில்லாமலும், சொற்ப ஆயுசையுடையதாகவும் இருப்பதுகளை சாதாரணமாக எல்லோரும் காண்கிறோம்.

ரஷியாக் கவர்ன்மெண்டின் பட்டாளத்தில் பென்சன் தாராயிருப்பதில் 103. வயதுள்ள ஒருவர் இப்பொழுது நடந்துவருகிற ஐரோப்பா யுத்தத்தில் தானும் போய் சண்டைசெய்வதற்கு அனுமதிகேட்டிருப்பதாய் பேப்பர் மூலமாகப் பார்த்திருக்கிறோம். இந்தியர்களில் பெரும்பாலும் 35 அல்லது 40—வயசுக்குள், பேரன், பேத்தி யெடுத்து எல்லாப்பவுஷுகளும் பார்த்து ஆயுசும் முடிந்துபோகிறது. ஐரோப்பியர்கள் 103. வருஷத்திற்கு ஆயுசோடிருப்பதோடுபோர்க்களத்துக்குப் போய் எதிரிகளை எதிர்த்து யுத்தம் செய்வதற்குப் போதுமான திடகாத்திர முள்ளவர்களாயிருப்பதற்குக் காரணம் அந்நாட்டுகளில் ஆண்களும், பெண்களும் போதுமான பிரகாரம் கட்டாயம் படித்து நல்லதிடமும், சுயேட்சையும் வந்ததின் பேரிலும் பெண்ணும், ஆணும் சம்மதியின்பேரில் விவாகம் நடக்கக் கூடியதாகவே யிருக்கிறது. ஐரோப்பியர்களில் பெண்கள் எவ்வளவு காலத்திற்கு விவாக மில்லா

தவர்களா யிருந்தாலும் அவர்கள் பேரில் சனங்கள் துவேஷம் கொள்ளும் வழக்கம் கிடையாது அநேகமாய் ஆண்களுக்கு 30- அல்லது 35- வயதுகளிலும், பெண்களுக்கு, ருதுவான 4, 5, வருஷத்திற்கு மேற்பட்டுந்தான் விவாகம் நடந்து வருகிறது இவர்கள் இப்படி 30-வயசுக்குமேல் விவாகம் முடிக்கிறதென்ற வழக்க மூள்ளவர்களா யிருப்பதினால் தான் ஒரே நோக்கமாய் போதுமானபடி படித்தும் படித்ததின் பயனாக ஏதாவது உத்தியோகம், அல்லது தொழில்களில் அமர்ந்து கொண்டு, அப்பால் விவாகத்திலும், அதன் சம்மந்தமான குடும்ப பாரங்களிலும் தலையிடுகிறார்கள். ஐரோப்பியர்கள் குழந்தைகளுக்கு சுகம் சீக்கிரம் என்று நினைத்து பிள்ளைகளுக்கு சீக்கிரமாக விவாகம் செய்து பார்க்க நினைக்காமல் போதுமானபடி படித்துத் தீர்வதற்கு ஒத்தாசையும், பிரயாசையுள்ள வர்களாகவுமிருக்கிறார்கள் இப்படிப்படிப்புத்தான் பிரதானமானதென்று உறுதிப்படுத்தியிருக்கும் வழக்கமானது செல்வத்திலும், நாரீகத்திலும் எவ்வளவோ மேன்மை யடைந்தும், நல்ல திடகாத்திரத்தோடும் அதிக ஆயுசோடும் ஜீவிக்கக் கூடியதாக இருக்கிறதல்லவா? இந்தியர்களாகிய நாமும் ஐரோப்பியர்களைப்போல் மனிதசன்மந்தானே, இப்படிசன்ம வித்தியாசமில்லா திருந்தும், நம்முடைய அறியாமையாலும், கெட்ட வழக்கத்தாலும் மனிதர் ஜீவியகாலத்திற்கு மேன்மையும், ஆதாரமுமான கல்வியென்னும் அழியாத ஆஸ்தியைக்கைப்பற்றாமல், பால்யவிவாகம் என்னும் படுகுழியில் விழுந்து உலகத்தில் பெருமையான காரியங்களை அடையாமலும், சரீரதிடமில்லாமலும், நீடித்த ஆயுசோடிருக்காமலும் போய்விடக் கூடியதாகவுமிருக்கிறது.

பெண்கள் விஷயமாகச்சிலர், பருவப்பெண்கள் கைம்பெண்ணாக மாட்டார்களாவென்ற அபிப்பிராயம் கொள்ளலாம். ஆனால் பருவமடைந்த பெண்களுக்கு விவாக முடிக்கிறதென்ற வழக்கமாயிருந்தால் புருஷர்கள் சொற்ப ஆயுசுள்ளவர்களா யிருந்தாலும் ஜீவியகால மட்டுக்குமாவது உலகசுகத்தை அனுபவித்திருப்பதோடு, குடும்ப விர்த்திக்காக ஏதாவது குழந்தை உற்பத்தியாகியுமிருக்கலாம். கைம்பெண்களுக்கு இப்படி ஏதேனும் குழந்தையிருக்குமானால், அவர்களுடைய துயரங்களை குழந்தைகளைப்பார்க்குமூலமாக நீக்கி குழந்தைகளை வளர்க்கவேண்டிய விஷயத்தில் மனதையும், முயற்சியையும் செலுத்திக் காலங்கழித்துக் கொள்ளுவார்களல்லவா?

பால்ய விவாகங் கூடாதென்று சொல்லும்போதெல்லாம் அநேகர் மதம்போச்சு, கோவில்போச்சு, குளம்போச்சு, சுவாமிபோச்சு என்று சொல்லிப் பெருங்கூப்பாடு போடுகிறார்கள். பருவமடைந்த பின்புதான் பெண்களுக்கு விவாகம் செய்யவேண்டுமென்று சொல்வதின் மூலமும் மேற்படி சொல்லின் பிரகாரம் நடைபெறக்கூடியதின் மூலமும் மதமும், கோவிலும், குளமும், சுவாமியும் போய் விடவே மாட்டாது. சுவாமிபக்திக்கு இஃது காரணம் அல்ல பால்ய விவாகத்தை ஆதரிப்பவர்கள் எல்லாம்சிசுகத்தி பாபஞ்செய்யக்கூடிய மகா சண்டாளர்களாவதோடு இப்படிச் சிசுகத்தி பாபஞ் செய்யக்கூடியவர்கள் வசிக்கும் நாடுகள் எந்தவிதத்திலும் முன்னேற்றம் அடையாமல் அடிமையாகவே இருந்து தீருமென்பதில் சந்தேகமே கிடையாது.

இனிமேலாவது பால்ய விவாகம் என்னும் தீமையான காரியங்களை விலக்கி பாலர் பாலிகைகளுக்கு கட்டாயப்படிப்பாக ஏற்படுத்தி எல்லோரும் போதுமான பிரகாரம் படித்து, கைத்தொழிலையும், விர்த்தி செய்வதுதான் ஜனங்களுடைய விர்த்திக்கும், மேன்மைக்கும், அடுத்ததாகுமென்பதை ஒவ்வொருவர் மனதிலும் உறுதிகொள்ளுவார்களாக.

II

இந்தியாவில் சனசங்கைக் கணக்கின்படி ஒருவருஷத்திற்கு உட்பட்ட விதவைகள் 623. இருப்பதாகத்தெரிகிறது. இதைக்கேட்ட கல்லும் உருகும், பிள்ளைகளைப் பெறுதவர்களுங்கூட கண்ணீர் வடிக்காமலிருக்க முடியாது. முன்னாளில் சனங்களுக்கும், சனங்களுடைய ஆதாரத்துக்குரிய காரியங்களை விருத்தி செய்வதற்கும் வகைகள் இன்னதென்று அறியாத, அரசர்களில் சிலரால் விவாகமாகாத பெண்களையெல்லாம் தனனிஷ்டத்திற்கு உட்படும்படி கொடுமை செய்துவந்த நிமித்தம், அந்தக்காலத்தில் அப்பேர்ப்பட்ட கொடும்பாவிகளுக்குப்பயந்து பெண்களுக்கு சிறிய பருவத்திலேயே விவாகம் செய்துவைத்திருக்கிறார்கள்.

இதை அனுசரித்துத்தான், அப்பொழுது சனங்கள் நடந்துகொள்ளுவதற்கு நீதிமார்க்கத்தை யெழுதினவர்கள், பெண்களுக்கு ருதுவாகுமுன் சிறுவயதிலேயே விவாகஞ்செய்து வைக்கரது

பொருல் அப்பெண்ணின் தாய், தந்தை, தமையன், தாய் மாமன் முதலானவர்கள் நரகத்தை அடைவார்கள் என்று ஏடுகளில் எழுதி வைத்திருப்பதாகத் தெரிகிறது.

சாதாரணமாய் அந்தக்காலங்களில் செய்யக் கூடாதென்ற காரியத்தை விலக்கவேண்டுவதற்குச் சொல்லப்படுவதில் நாகத்தை அடைவாய் என்றும், நல்லகாரியத்தைச் செய்யலாம் என்று சொல்லப்படுவதில் மோட்சத்தை அடைவாய் என்றும் சொல்லிவந்ததாகவே தெரிகிறது.

இப்பொழுது அப்படிக்கான அரசர்களும், அதிகாரங்களும் கிடையாது சனங்களுடைய மேன்மைக்கும், சௌகரியத்திற்கும், மெஜாரிட்டி தீர்மானத்திற்கும் ஏற்றபிரகாரம் எல்லாச் சட்டங்களையும் மாற்றியும், புதிதாகச் சேர்த்தும் வரப்பட்டு வருகிறது இதை அனுசரித்து பெண்களுக்கு ருதுவாகுமுன் சிறுவயதில் விவாகஞ்செய்தால் அப்பெண்ணின் தாய், தந்தை, தமையன், தாய்மாமன் முதலானவர்கள் தண்டனை அடைவார்களென்று பழைய ஏடுகளில் திருத்தி யெழுதி வைக்கவேண்டிய தவசியமாயிருக்கிறது. இப்படி பழையஏட்டைத்திருத்தி யெழுதிவைத்தும் அதின்பிரகாரம் நடந்து கொள்ளுவதுமூலமு ஆனமிடிந்துவிழவும், சமுத்திரம்பொங்கி நாட்டில் புகுந்து விடவும், மலைகளெல்லாம் எரிமலைகளாக நெருப்புக் குழம்பாக கக்கி விடவுமாட்டாது. நரகம் என்று சொல்லச்கூடியது வந்துவிடவுமாட்டாது.

மனிதர்கள் மோட்சத்தையாவது நரகத்தையாவது அடைவதற்கு விவாகங்கள் காரணம் ஆகவே மாட்டாது,

மாட்சிமை தங்கிய விக்டோரியா மகாராணி சக்கிரவர்த்தினி அவர்கள் இந்தியாவை நேரில் ஒப்புக் கொண்டகாலத்தில் இந்தியாவில் மதவிஷயத்தில் தான் சனங்கள் வீணாக நாசத்தை அடைகிறார்களென்பதை அறியாதபடியால்தான் மதத்தில் பிரவேசிப்பதில்லையென்று சொல்லியிருக்கிறார்கள். இதை முன்னிட்டுத்தான் காலதேச வர்த்தமானம் அறியாமல் கொள்ளிக்கட்டையை யெடுத்து தலையைச் சொறிவது போல் மதத்தில் பிரவேசிப்பதில்லையென்று சொல்லியவைக்கு விரோதமாய் இப்பொழுது மதத்தில் பிரவேசிக்கிறார்களென்று சொல்லி உலகத்தில் மற்றவர்கள் மனிதசக்தியால் பெறப்பெற்று அனு

பவித்தும் மேன்மைகளைக்கண்டு வெட்கப்படக் கூடியதாயிருக்கிறது.

சாதிப்பிரிவுகளும், மதக்கொடுமைகளும், நாட்டில் இருக்கும் வரை உண்மையான மோட்சத்துக்குரிய தன்மையை அறியமுடியாது போவதோடு சனங்களுடைய சீவியத்திற்கு வேண்டிய சேர்க்கைச் சாமான்களில் ஒருபைசாவுக்கு சுமார் நான்கு வீதம் விற்றுவருகிற குண்டூசியைக்கூட செய்து கொள்ளவும் முடியாது.

சாதிப்பிரிவுகளும், மதக்கொடுமைகளும், சனங்களைவிட்டு நீங்கினுல் தான் சனங்களுக்குள் வேற்றுமைகளும், விரோதங்களும், சச்சரவுகளும், அறியாமைகளும், ஆபாசமான வீண் செலவுகளும் அடிமை வாழ்க்கையும்நீங்கி எல்லோரும் ஒற்றுமைப்பட்டு சனங்களுடைய மேன்மைக்கும் முன்னேற்றத்திற்குமான கல்விச்சாலைகளும் வைத்தியசாலைகளும், அதிகப்பட்டு சனங்கள் நோயற்றவாழ்வும், தீர்க்காயுசும், விசேஷமான அறிவும், குபேரசம்பத்தும் உடையவர்களாகி தேவபோகங்களை அனுபவிப்பதோடு புண்ணியத்தைச்செய்து அதன் மூலம் உண்மையான மோட்சத்தை அடைவதற்காக வேறு கண்டங்களுக்கும் போய் அங்குள்ளவர்களுக்கும் கல்விச்சாலைகளையும், வைத்தியசாலைகளையும் விசேஷமாய் உண்டுபண்ணிக் கொடுக்கும்படியான தன்மைகளும்உண்டாகும்.

அமரிக்காக்காரர்கள் நமக்கு பந்துக்களிலாவது, சாதியிலாவது, ஊரிலாவது, தேசத்திலாவது, பாஷையிலாவது, கண்டத்திலாவது, மதத்திலாவது சம்மந்தமில்லாதவர்களாயிருந்தும் பரோபகாரத்தின் மூலம் அவர்கள் அந்தகண்டத்திலிருந்து ஏராளமானபொருள்களைக் கொண்டுவந்து நமக்குமேலான கல்வியையும், வைத்தியத்தையும் அருள்செய்து வருவதினுலல்லவா? அவர்கள் உலகத்திலேயேமேலான சம்பத்தையும், போகங்களையும் அடைந்து வருகிறுர்கள்.

இந்தியாவில் மதம் என்றவகைகளில்தான் சனங்களுடையபொருள்களும், ஆயுள்காலங்களும் வீணுகக்கழிந்து போகிறதோடு பாபத்தொழில்களும் தொற்றுவியாதிகளும் உண்டாகிறது.

சீவகாருண்ணியத்தை முன்னிட்டு, பெண்களை உடன்கட்டையேற்றியவழக்கத்தை நிறுத்திய காருண்ணியகவர்ன்மெண்டாரவர்கள் சிசுகத்திஎன்னும் பால்யவிவாகத்தைசட்டங்களின்மூலம் நீக்கவேண்டுவது அவசியமாகவும், நியாயமாவுமிருக்கிறது.

சன்மார்க்க உபன்னியாசம்.

அன்பர்களே!

சென்ற மீட்டிங்கியில் யான் மானிட வாழ்விற்கு கல்விதான் முக்கியமென்றும், அதை விர்த்தி செய்வதற்குச் சங்கங்கள் தான் ஆதாரமாகுமென்றும்; ஒரு வியாசம் சொல்லியிருந்தேன் அதையெல்லோரும் அங்கீகரித்து அதன்படி நடந்து கொள்ள அபேட்சையுள்ளவர்களாக இருப்பீர்களென்று பூரணமாக நம்புகிறேன்.

உலகத்தில் எண்ணுதற் கரிதாகிய பிறவிகளில் மானிடப்பிறவி தான் விசேஷமாக இருக்கிறது. இப்படி விசேஷப் பிறப்பைப் பெற்றும் தள்ளத்தக்கது கொள்ளத்தக்கது தெரியாமல் நடந்து வருவது அந்தோ பரிதாபம்! கேவலம் விலங்கினங்களும் வயிறை வளர்த்துக் கொள்ளுவதுபோலவா நாமும் உடலை மாத்திரம் வளர்க்க நினைத்துக் கொள்ளுகிறது நம்மை ஆளப்படும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரவர்கள் குருடர்களுக்குக் கண்ணைத்திறந்து காட்டியது போல் நமக்குச் சகல போகங்களையும் கொடுத்து மேலுக்கும் போவதற்கு ஒத்தாசையாகவும், இருக்கிறார்களே இக்காலத்தில் நாம் வீண் செலவுகளுக்கும், ஆபாசமான காரியங்களுக்கும், ஒருவர்க்கொருவர் போட்டி போட்டுக் கொண்டிருக்கிறோமே, இதுவென்ன அநியாயம், நாமும் மேல் நாட்டாரைப்போல் கல்வி விசேஷமானவர்களாக இருந்தால் ஆரியர்களும், இன்னுமற்றவர்களும் நம்மை அடிமைகளைப் போல் பாவித்து நமக்கு ஜீவாதாரமான பொருள்களைக் கொள்ளை கொள்ளுவார்களா? மேலும் நாம் குரும்பை ஆட்டிக்குச் சமானமாக ஒருவர் போனபிரகாரமே மற்றவர்களும் அதன்படியே நடப்பதோடும் செத்தவர்களுக்குச் சோறு போடுகிறோமென்று நினைத்துச்செய்கிற திதியையும் இன்னுமற்றக் கிரகசாந்தி முதலிய ஆபாசமான காரியங்களையும், பார்த்தீர்களா? இதுகளெல்லாம் நமக்ாவது நம் சாதியார்களுக்காவது பிரயோஜனப் படக்கூடியதாகவாயிருக்கிறது அல்லது செத்தவர்களெல்லாம் நாம் போடப்போகிற சோற்றுக்காக எங்காவது காத்துக்கொண்டிருக்கிறார்களென்றும், இப்பொழுது செய்கிற திதியிலுள்ளது அவர்களுக்குப் போய்ச்சேருமென்றும், நம்மில் யாராவது காட்சிப் பிரமாணமாக ரூபிக்கக் கண்டோ முடியுமா? இப்படி யுக்திக்கே யெட்டாத காரியமாக ஏமாற்றுக்காரர்கள் வலையிற் சிக்கி அவர்களுக்கு உணவுப் பொருளாக இருக்கிறோமே இனிமேலாவது

நம்முடைய அகக்கண்ணைத் திறந்து நாமும் நம்முடைய சாதியாரும் முன்னேற்றம் அடைய வேண்டிய மார்க்கத்தைத் தேட வேண்டாமா? இஃது ஒரு முக்கிய அவசியமில்லையா? அல்லது நாம்தானு முக்கியமென்று ஒவ்வொருவர்களும் நினைக்கிறீர்களா? இப்படியும் நினைக்கப்படாது ஒவ்வொருவர்களும் தாந்தான் முக்கியமென்று நினைத்து நம்முடைய சாதியார் இந்த மட்டிலாவது முன்னேற்றம் அடைய வேண்டிய மார்க்கத்தைக் கவனிக்கவேண்டும்.

இகபர சாதகமிரண்டிற்கும் கல்விதான் துணையாகிறது கல்வியானது ஒருவனுக்குக் கண்ணிருந்தும் சூரியன் அல்லது தீபத்தின் ஒளியின் உதவியில்லாது குறித்தசாமானை எடுத்துக்கொள்ளவோ இன்னுமற்றவேண்டும் சௌகரியங்களைச் செய்துகொள்ளவோ முடியாது போகிறது போலவே அறிவிற்குக் கல்வியென்கிற உதவி இல்லாது போனால் விசேஷசுகத்தை அடைய முடியாதமேதோடு அற்ப உணவுக்காக மற்றவர்களுக்கு மிருகத்தைப்போல் காலைமுதல் மாலை வரையும் உழைத்தே தீரவேண்டும். இப்படி முடிவதைப்பற்றி விதிவசமென்று சொல்லாமல் மதிவசமென்றுதான் சொல்லவேண்டும் சர்வவல்லமையுள்ள கடவுள் எல்லோருக்கும் நல்ல அறிவைக் கொடுத்தேயிருக்கிறார் மேலும் "முயற்சி மெய் வருந்தக்கூலி தரும்" என்றும் "முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார்" என்றும், மேலோர் சொல்லியுமிருக்கிறார்கள். இவைக்கேற்ப ஐரோப்பா முதலிய தேசத்தார்களின் முயற்சியால் அவர்கள் வசிக்குமிடம் பொன் விளையும் பூமியைப்போல் பிரகாசிப்பது எல்லோருக்குந் தெறிந்ததாகவே யிருக்கிறது. செப்புக்குடத்துக்குள் விழுந்த எலி அதைத்தானே திருப்பாற்கடலென்று நினைத்துக்கொண்டது போல் நாம் நம்முடைய நிலைமையைத் தானே சிலாகித்து இருமாப்புக்கொள்ளாமல் கால தேசவர்த்தமானம் நோக்கி நாமும் நம்முடைய சந்ததியாரும் சாதியாரும் இன்னும் கீழான நிலமைக்குப் போகாதபடி நம்முடைய முயற்சியையும் அதிகப்படுத்தி மேன்மையை அடைவதுதான் மனிதப்பிறவிக்கு ஒத்ததாகும்.

மனிதர் அறிவிற்குத் துணையானது கல்வியாகிறபடியால் இதை விர்த்தி செய்வதற்கு சங்கங்கள் தான் ஆதாரமாகிறது. சங்கங்கள் மூலமாகத்தான் பலருடைய அறிமுகம் ஆவதோடு பொதுக்காரியங்களும் நடைபெறவேண்டும். பொதுக் காரியங்கள் சரியாய் நடந்து

வருவதிலிருந்து தான் மேன்மையை அடைவதற்கான அனுகூலங்கள் கிடைக்கக்கூடும்.

நமக்கும் ஏதோ அனுகூலமான காலங் கிட்டியிருக்குமென்று நினைக்கும்படியாகத்தான் இந்தக் கல்விச் சங்கம் ஏற்பட்டு நாமும் இப்பொழுது இங்கு கூடியிருக்கிறோம். இனியிதில்முடிய வேண்டியதைப்பற்றி விஸ்தாரமாகப்பேசி அதன்படி நடந்துகொள்ள ஒவ்வொருவர்களும் உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

இதில் சம்மந்தப்பட்ட எல்லோரும் போதுமான தொழிலில் அமர்ந்திருப்பதானாலும் இச்சங்கத்தின் பேரில் முக்கிய அபிமானமுள்ளவர்களாக இருந்தும் மீட்டிங்கு காலந்தோறும் தவறாது வந்திருந்து நம்முடைய முன்னேற்றத்திற்கு ஏதுவான காரியங்களைக்கவனிக்கவேண்டும்; நாம் கவனிக்கப்படுகிற பிரகாரம் நம்மில் எல்லோரும் நடந்து மற்றவர்களும் இதுமேன்மைதான் என்று சொல்லிப் பின் பற்றுவதாக இருக்கும்படி காட்டவேண்டுமென்றுநான் மிகவும் வற்புறுத்திச்சொல்லுகிறேன்.

கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

1. அதிகாலையில் எழுந்திருந்து காலைக்கடனை முடித்து அவரவர்களுக்கு ஏற்பட்டிருக்குந் தொழிலைச் சோம்பலில்லாமல் சுறுசுறுப்போடும் முறையாகவும் பார்த்து வரவேண்டும்.

2. பெற்றோர் முன்னோர் முதலானவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடந்தும் நம்மை எதிர்பார்த்தவர்களுக்கு கூடுமான சகாயமுள்ளவர்களாகவுமிருந்து வரவேண்டும்.

3. தெய்வ பக்தியும் இராசவிசுவாச முள்ளவர்களாகவும் நடந்து வரவேண்டும்.

4. நீதி நூல்களையும் படித்து சீவகாருண்ணிய முள்ளவர்களாகவும் நடந்து வரவேண்டும்.

5. வீண் செலவுகளையும் அனாவசியமான காரியங்களையும் கண்டிப்பாய் நீக்கவேண்டும்.

6. நம்முடைய சிறுவர் சிறுமிகளுக்கு சிறுபிராயத்திலிருந்தே ஆபாசமில்லாமல் நல்லவார்த்தைகளாகவே சொல்லிக்கொடுத்துநடை உடை பாவனைகளையும் நாகரீகமாகப் பழக்கி வரவேண்டும்.

7. நகை அணிவதைக் கூடுமான வரை சுருக்க வேண்டும்.

8. குழந்தைகள் வீண் விளையாட்டில் பிரவேசிக்காமல் பாது காத்து வரவேண்டும்.

9. சிறு பிராயத்திலேயே பள்ளிக்கு அனுப்பிப் போதுமான படி கல்வி கற்றுக்கொடுக்கவேண்டும்.

10 கெட்ட பிள்ளைகளோடு பழகாமல்ப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

11. படித்துத் தேறியவர்களில் சிலரையாவது அன்னிய நாட்டுக்கு அனுப்பி மேலான படிப்பையும், கைத்தொழிலையும் படித்து வரச்செய்யவேண்டும்.

12. பால்ய விவாகத்தையும், பெண் வீட்டாருக்காவது, மாப்பிள்ளை வீட்டாருக்காவது பணம் கொடுக்கிற வழக்கத்தையும், கண்டிப்பாய் நிறுத்தவேண்டும்.

13. நம்முடைய கையிலிருந்து செலவாகிறபணம் ஒரு பைசாவாக இருந்தாலும் அது நமக்காவது, நம்முடைய சாதியார்களுக்காவது பிரயோஜனத்தைக் கொடுக்கக்கூடியதாகவே யிருக்க வேண்டும்.

14. கல்விச்சாலைகளுக்கும், சன்மார்க்க விஷயமான சங்கங்களுக்கும் கூடுமான அளவு உதவி புரிவதோடு மேற்படி காரியங்கள் விர்த்தியாவதற்கு வேண்டிய பிரயத்தன முள்ளவர்களாகவு மிருக்க வேண்டும்.

15. கைத்தொழில்களையும், வர்த்தகத்தையும், விவசாயத்தையும் மேன்மேலும் விர்த்தி செய்து வரவேண்டும்.

16. சாதாரணமாய் அன்னிய நாட்டுகளுக்குப்போய் நூதனமான காரியத்தைக் கவனிப்பதோடு அன்னிய நாட்டு ஏற்றுமதி இறக்குமதி வியாபாரத்தைத் தெரிந்து அதையும் நடத்திவரவேண்டும்.

17. வசனிக்கிற வார்த்தைகள் முழுமையும் உறுதி மொழியாகவே யிருக்கவேண்டும்.

18. எதிலும் உறுதிமொழி யில்லாமலும் நம்பிக்கைக்குறைச்சலான காரியங்களாக நடைபெறுமானால் நம்முடைய வியாபாரமும் தொழிலும் விர்த்தியடையாது நாமும் துன்பத்தை அடைய நேரிடுமென்பதை உறுதியாய் நம்பவேண்டும்.

19. செய்யப்படுகிற எந்தக் காரியங்களையும் நன்ருய் ஆலோசித்து நியாயப் பிரகாரமும், பிறத்தியாருக்கு துன்பத்தை உண்டுபண்ணக்கூடாத நிலைமையாகவும் செய்து வரவேண்டும்.

20. ஏதேனும் விவகாரம் ஏற்பட்டால் அதுகளைப்பற்றிக் கோர்ட்டு மூலமாய் வழக்கிட்டு பணத்தைச் செலவு செய்து மானமுங் கெட்டு மதிமயங்கி நிற்காமல் பஞ்சாயத்தார் மூலமாக முடித்துக் கொள்ளவேண்டும்.

21. விவாகம், மரணச்சடங்கு முதலான காரியங்களில் அளவுக்கு மிஞ்சியும் ஆபாசமாகவும் செலவுசெய்து நடத்துவதை நிறுத்தி வருவாய்க்குத்தகுந்த செலவாகச்செய்து நாகரீகமாக நடத்தி வரவேண்டும்.

22. சமாச்சாரப் பேப்பர் மூலமாக அநேக காரியங்கள் வெளியாகிறபடியால் ஒருவர் அல்லது பலர் சேர்ந்தாவது முக்கியமான பத்திரிகைகளை வரவழைத்து வாசித்து வரவேண்டும்.

23. நம்மில் பலர் யூனியன், முனிசிபல், டிஸ்ட்ரிக்ட் போர்டு, தாலூகாப் போர்டு சட்டசபை முதலானதுகளில் கவுரவச் சேர்மனுகவும், மெம்பர்களாகவும், ஏற்பட்டால் தான் நமக்குள்ள குறைகள் வெளியாகி அதுகள் நிவிர்த்தி ஆகக்கூடுமென்பதை எல்லோரும் கவனிக்கவேண்டும்.

24. பொதுக்காரியங்களில் மெஜாரிட்டியாரின் தீர்மானங்களுக்கு அவசியம் கட்டுப்படக் கூடியவர்களாயிருக்கவேண்டும்.

இத்தியாதி காரியங்களை ஒவ்வொருவர்களும் பசுமரத்தாணி போல் மனதிற் பதிப்பார்களாகில் நாமும் நம்முடைய சாதியாரும் சீக்கிரம் மேன்மையை அடையலாம்.

சுகா தாரம்.

சுகாதாரமானது மனிதர்களுடைய சுகத்திற்கும்,நோயற்ற வாழ்விற்கும், சரீர திடத்திற்கும், ஆயுசு விர்த்திக்கும் காரணமாயிருக்கிறது. எந்தவீடு தெரு ஊர் நாடு தேச முதலானவைகளில் சுகாதாரத்தைப் பற்றி கவனிக்கப்படாமலிருக்கிறதோ அவ்விடங்களிலுள்ள சனங்கள் பெரும்பாலும் அங்க ஈனமும், வியாதியும், பலக்குறைவும், ஆயுசுக்குறைவும், சனவிர்த்திக் குறைவுள்ளதாகவுமிருக்குமென்பது மறுக்க முடியாததாக இருக்கிறது.

காலரா, முதலிய தொற்றுவியாதி உண்டான சமையம் சனங்கள் காளி முதலான தேவதைகளுக்குப் பணிவிடை செய்வது குறைந்திருப்பதினால் தான் இவ்வித ஆவேசமுண்டாயிருக்கிறதென்று நினைத்து அத்தேவதைகளுக்கு அநேகர் பொங்கல் முதலானவைகள் செய்தும் ஆடு, கோழி முதலிய சீவராசிகளைப்பலியிட்டும் வீடு, தெரு முதலானவைகளை அதிக ஆபாசப்படுத்திக் கொள்ளும் வழக்கம் அதிகமாயிருந்து வருகிறது. இந்த ஆபாசத்தின் மூலமாகவும் தொற்றுவியாதி அதிகப்பட்டு சனங்களில் பெரும்பாலோரைக் கொள்ளை கொண்டு போவது சகசமாயிருக்கிறது. பிறந்த குழந்தைகளை மூன்று வயசு வரைக்கும் தங்களுடையதாகப் பாவிக்காமல் மாரியாத்தாள் குழந்தையென்று சொல்லிக்கொள்ளுகிற வழக்கமுண்டு. அதாவது குழந்தைகளுக்கு வைசூரி குத்திக்காத்துக்கொள்ள வேண்டுமென்பது தெரியாமல் குழந்தைகளுடைய சரீரத்தின் பல பாகங்களிலும் அம்மை வெளியேறி சரீரத்தை ஆபாசப்படுத்தி கண், காது, மூக்கு முதலான அவயவங்களைக் கோரப்படுத்தியும் அநேகமாய் 100-ல் 80 குழந்தைகளை மரணப்படுத்தியும் வந்திருக்கின்றது. இப்படி நேரக்கண்டும், மாரியாத்தாள் என்று சொல்லிக்கொண்டும் மேற்படி தேவதைக்கு பிரார்த்தனை செய்வதற்காக வாக்குத்தத்தம் செய்துகொண்டிருந்தார்களே யொழிய குழந்தைகள் பிழைக்கும் வழியைப் பார்த்தார்களில்லை. மறுபடி நம்முடைய காருண்ய கவர்ன்மெண்டார் குழந்தைகளுக்கு வைசூரி குத்திக்கொள்ள வேண்டுமென்று மெதுவாய்ச் சொல்லவந்த காலத்தில் இப்பொழுது சென்னை முதலான பெரிய பட்டணங்களிலுள்ள படித்தவர்களுங்கூட ருதுமதி விவாகமென்று சொன்னாலுங்கூட கூக்குரலிடுவது போல் குலாசாரமும், மதாசாரமும் கெட்டுப்போகுமென்று சொல்லி குழந்தைகளை மறைத்து வைக்க ஏற்பட்டார்கள். இது மூலமாய் குழந்தைகளுக்கு வைசூரி குத்தித் தீரவேண்டுமென்பதை கட்டாயத்தில் வைத்து நடத்தி வருவதினால் குழந்தைகள் வைசூரியினால் மரணமாவது அநேகமாய் நின்றுவிட்டதோடு அவயவங்களில் முன் ஏற்பட்டமாதிரி கோரங்களில்லாமலிருப்பதை எல்லோரும் அனுபவமாகப்பார்க்கிறோமல்லவா?

சுகாதார விஷயங்களை கவனிக்கும் பொருட்டாகத்தான் கார்ப்பொரேஷன், முனிசிபாலிடி, யூனியன் முதலானவைகளை பலவிடங்களிலும் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். ஆனால் ஒவ்வொன்றையும் வரை

யறுத்துக் கட்டாயப்படுத்தக் கூடியதாக வைக்காதபடியால், சுகாதார விஷயம் மேன்மைப்படாமல் பல விடங்களிலும் தொற்று வியாதி குடியிருந்து கொண்டே வருகிறது.

ஐரோப்பாமுதலியதேசங்களில் சட்டங்களைகட்டாயப்படுத்தவேண்டுமென்ற அவசியமில்லை. நிபுணர்கள் அல்லது இராசாங்கத்தார் விளம்பரப்படுத்துகிற பிரகாரம் நடந்துகொள்ள சகலரும் ஆயத்தமுள்ளவர்களாக இருக்கிறார்கள். பொதுவாய் அந்த நாடுகளிலுள்ள ஒவ்வொருவர்களும் தங்கள் தங்கள் க்ஷேமத்தை மட்டும் கவனிக்கிறதென்றில்லாமல் தேச க்ஷேமத்துக்கே உழைக்கக்கூடிய வழக்க முள்ளவர்களா யிருக்கிறார்கள். இப்படி இவர்கள் வழக்கப் படுத்தியிருக்குந் தன்மையானது, அந்நாடுகளில் தொற்றுவியாதி முதலான அகால மரணங்கள் அதிகமில்லாமலும், எல்லாச்சனங்களும் நல்ல திடகாத்திர முள்ளவர்களாகவும், சனவிர்த்தி யுள்ளவர்களாகவும், நீடித்த ஆயுசு உள்ளவர்களாகவு மிருக்கிறார்கள்.

இப்படி மேல்நாட்டு வைபவம் மலிந்துவரும் இக்காலத்திலுங்கூட, ஒவ்வொருவர்களும் தேச க்ஷேமத்திற்காக வெளிக்கிளம்பி உழைக்காது, பழைய காலத்துப் புராணங்களைத் தானேபடித்துக் கொண்டிருந்தால் இனி எக்காலம் மேன்மையை அடைவது.

இந்தியர்கள் பெரும்பாலும் சுகாதாரம் இன்னதென்றும், அதனால் உண்டாகும் பிரயோஜனம் இன்னதென்றும் முழுதும் உணர்ந்தவர்களில்லை. ஒருவேளை வார்த்தைகள் மூலமாகவாவது, அல்லது வாசக மூலமாகவாவது தெரிந்தாலும் அவைகளெல்லாம் யாருக்குச் சொல்லியதோ வென்று பராமுகமா யிருக்கலாம். குடியிருப்பு வீடு முதலான கட்டடங்கள் சுகாதார விதிப்படி கட்டுகிறதில்லை. ஒரு குடும்பத்தில் ஒருவருடைய வசிப்புக்காக கட்டியவீட்டை மறுபடி அதே குடும்பத்திலுள்ள வார்சுகள் "புராதனவீடு பாகப்படி எல்லோருக்கும் வேண்டும் ஆகையால் நிலத்தை அளந்து குறுக்குச் சுவர் வைத்துத்தடு" வென்று சொல்லி ஒருவருக்கும் உதவாத பிரகாரம் ஆக்கி விடுவதோடு, கழிவு சாமான்களில் ஒரு காசுக்குக்கூட உதவாதவைகளையும் பாம்பு, தேள், பூரான், எலி, பல்லி, கொசு, மூட்டை முதலிய சீவராசிகள் குடியிருக்கும்படி வீடுகளில் பல பாகங்களிலும் போட்டு வைத்து இடைஞ்சலையும், ஆபாசத்தையும் உண்டுபண்ணுகிறார்கள். வீடுகளில் இரவுகாலம் கொசு, மூட்டை

உபத்திரவத்துக்குப்பயந்து ஏகாதசி விரதங்காக்கும் பாவனையைப் போல் இரவு முழுதும் விழித்துக்கொண்டிருந்து காலம் போக்கு கிறார்களேயொழிய சுகாதாரக்குறைச்சலினால்தான் கொசு, மூட்டை உற்பத்தியாகிறதென்பதைத் தெரிந்து கொள்ளும் வழக்கமுள்ளவர் களாயில்லை. வீதிகளில் ஆபாசத்தை உண்டுபண்ணினால் தனக்கும், பக்கத்தார்களுக்கும் கெடுதியை உண்டுபண்ணுமென்ற யோசனை கிஞ் சிற்றுமில்லாமல் வீதிகளைச் சாதாரணமாக கொல்லைப்புறத்து கக்கூஸ் களைப்போல் பாவித்து சகல ஆபாசங்களையும் வீதிகளிலேயே கழித்து வருகிற வழக்கமாயிருக்கிறது. குடி தண்ணீரை வெகு சுத்தமாக வைத்து உபயோகிக்க வேண்டுமென்ற கட்டாய மிருப்பதுமில்லை. சாதாரணமாய் பிலாப்பழ முதலிய பழவர்க்கங்களில் கெட்டுப்போன வைகளையும், புழுக்களும், கொசுக்களும், விழுந்தவைகளையும் எல் லோரும் வாங்கிப் புசிப்பதாகவே யிருக்கிறது. சனங்களுக்குப் பீடை கள் உண்டாவது அநேகமாய் கெட்ட தண்ணீர் மூலமாகவும், கெட்ட ஆகாரத்தின் மூலமாகவுமே ஏற்படுகிறது.

இது விஷயமாய் கார்ப்பொரேஷன், முனிசிபாலிடி, யூனியன் சம்பந்தமான உத்தியோகஸ்தர்களும், மெம்பர்களும் கவனித்து ஒவ் வொன்றையும் கட்டாயப்படுத்தி நடத்தி வரவேண்டியதுதான் சனங் களுடைய க்ஷேமத்திற் கேதுவானதாகும்.

சீவகாருண்யம்.

சீவகாருண்யம் என்பது, சீவர்கள் பேரில் இரக்கப்படுவது, இதற்கு மேல்பட்ட தானதருமங்களும், தபசெபங்களும் கிடை யாது. சீவர்களில் மனிதர்களுக்கு அறிவு விசேஷமாகவும், மற்றப் பிராணிகளுக்கு அறிவு குறைச்சலாகவும் இருப்பது கொண்டுதான் மனிதர்கள் மற்றப்பிராணிகளை இம்சை செய்தும், கொன்று தின்றும் வரும் வழக்கமாயிருக்கிறது.

மனிதர்களுக்குப் போலவே மற்றப்பிராணிகளுக்கும் சுகம், துக்கம் உண்டு அவைகளை இம்சிக்கும்போது அவைகள் வேதனையை அடைவது தெரியவே செய்கிறது. மனிதர்களுடைய உணவிற்காக வே மற்றப்பிராணிகள் உண்டாக்கப்பட்டதாயிருந்தால் அவைகளைக் கொலைசெய்யும்போது அவைகளுக்கு யாதொரு வேதனையும் உண்டா காமலிருக்க வேண்டும்.

மனிதர்களுடைய உணவிற்காக அசரவடிவான அநேக பதார்த்தங்கள் கிடைக்கக்கூடியதில், கேவலம் வழக்கத்தால் வந்த கொலைத் தொழிலை மாற்றிக்கொள்ளுவதுதான் மனிதர்களுடைய பகுத்தறிவுக்கு ஒத்ததாகும்.

அசரவடிவான மரம், புல், கொடி, செடி முதலானதுகளிலும், சீவன்கள் உண்டு என்றும், அவைகளையும் மனிதர்கள் புசிக்கப்படாதென்றும் சிலர் நினைக்கலாம். அசரவடிவான மரம், புல், கொடி, செடி முதலானவைகளுக்கு பசி, தாகம் உண்டாகிறதென்றும் அவைக்கான உணவுகள் இருக்கும் இடங்களுக்குத் தேடிப்போய்ப் புசிக்கிறதென்றும், தனக்கு ஏதாவது இம்சை உண்டானபோது வேதனையை அடைகிறதென்றும் தெரியவில்லை. மேலும் அசரவடிவானதை சிறிதுபாகம் வெட்டி வேறு இடத்தில் நட்டிவைத்தால் வெட்டப்பட்டவை கெட்டுப்போகாமலும், வெட்டி, நட்டி வைத்ததும் தளிர்த்துக்கொள்ளுவதாலும், அசரவடிவான மரம், புல், கொடி, செடி, முதலானதுகளுக்கு, சரவடிவான மனிதர், மிருகம், பட்சி முதலானதுக்குப்போல் சுக துக்கத்தை அனுபவிக்கக்கூடிய சீவன்கள் கிடையாதென்பது காட்சிப்பிரமாணமாக இருக்கிறது.

உண்மையான கடவுளும், உண்மையான பக்தி மார்க்கங்களும் இன்னதுதான் என்பதை அறியாமையாலும், உணவின் ஆசைபற்றியும், சனங்களுடைய வாழ்கைச்சுகத்தில் ஏதாவது குறைச்சல் ஏற்பட்ட போதும், பெருமைக்காகவும், வேடிக்கைக்காகவும் ஏதோ தெய்வமென்று பெயர்சொல்லி அவைகளுக்கு பிரார்த்தனையென்று ஆடு, கோழி, பன்றி, முதலானதுகளை இரக்கமின்றி கொலைசெய்து வருகிறார்கள். வாஸ்தவத்தில் தெய்வத்திற்கு வேண்டியதாயிருந்தும், அதற்காகவே பிரார்த்தனை செய்து பலியிடப்படுவதானால், பலியிட்ட பிராணியின் உடலை, பலியிட்ட மனிதர்கள் அப்படியே போட்டு விட்டுப்போய் விடவும், அவைகளை அந்தத் தேவதை ஒப்புக்கொண்டு தன்னிஷ்டப்படி செய்து கொள்ளவும் வேண்டுமல்லவா?

உற்சவ காலங்களில், இரதத்திற்கு ஆடு பலியிட்டால்தான் இரதம் ஓடும் என்றும், பேய், பிசாசுகள் தடுக்காதென்றும், வழக்கத்திற்கு விரோதம் செய்யக்கூடாதென்றும் நினைத்து, ஆடுகளைப்பலி

யிடுகிறார்கள். எத்தனையோ ஆடுகளை அனியாயமாய் பலியிட்டதி லும் அந்த மட்டில், இரதம் தானாகவே ஓடிவிடாமல் வேண்டிய ஆட்களைக் கொண்டு இழுத்துத்தீர வேண்டியதாகவே யிருக்கிறது. ஆலயங்கள், சுவாமிகள் என்ற வகைகளில் ஆதியில் நடந்து வந்த வழக்கத்திற்கு விரோதமாய் இப்பொழுது மின்சார விளக்குகளும், காஸ்லைட்களும், சீமைக்கமல நகைகளும், சரிகைத்துப்பட்டாக் களும், வெள்ளி தங்கத்தகடு போட்ட வாகனாதிகளும் உண்டா க்கி இருப்பதோடு, இன்னமும் நூதனமான நகைகளும், பட்டு களும், வாகனாதிகளும், வேடிக்கைச்சாமான்களும் வாங்கி வைப் பதற்கும், செய்து வைப்பதற்கும் கண்ணும், கருத்துமாயிருந்து வரக்கூடியதாகவுமிருக்கிறது. இப்படி வழக்கத்திற்கு விரோதமாய்ச் செய்ததுகளை ஒப்புக்கொண்டிருப்பது போலவே எளிய பிராணிகளை கொலை செய்வதை நிறுத்துவதையும் வெகு சந்தோஷமாகவே ஒப்புக்கொள்ளக் கூடுமென்பது அனுபவப் பிரமாணமாயிருக்கிறது. தொழிற் சாலைகளிலும், சேவுத்துறைகளிலும் நூறு, டன் இடை யுள்ள சாமான்களையும் யந்திர சகாயத்தால் சாமான்களை, இருந்த இடத்திலிருந்து, பூச்செண்டைப்போல், அப்படியே தூக்கி, வைக்க வேண்டிய இடத்தில் அப்படியே வைத்துவரும் இக்காலத்திலாவது, ஆடு பலியிட்டால்தான் இரதம் ஓடுமென்ற அறியாமையை நீக்க வேண்டாமா?

மனிதர்களுக்கு பகுத்தறிவு உண்டு இப்படிக்கான அறிவினால் நன்மையான காரியங்களை அணுகியும் தீமையான காரியங்களை விலக் கியும் வருவதுதான் மனித சன்மத்திற்கு ஒத்ததாகும்.

உணவின் ஆசைக்காகவும், அறியாமைக்காகவும், வேடிக்கைக் காகவும் சீவர்களைக்கொலை செய்வது நன்மையல்லவென்று அறி வதோடு எல்லாச் சீவர்கள் பேரிலும் இரக்கப்படுவதுதான் மனிதர் களுடைய மறுமைப்பயனை அடைவதற்கு ஏதுவாகும் என்பது சத்தியம்.

கடவுளும், கடவுள் பக்தியும்.

உலகத்தில், கடவுள் உண்டு என்று சொல்லுகிறவர்களும், கட வுள் உண்டோ யில்லையோவென்று சந்தேகமாகச் சொல்லுகிறவர்

களும், கடவுள் என்று ஒன்றும் கிடையாது எல்லாம் இயற்கைஎன்று சொல்லுகிறவர்களும் இன்னும் பலவிதமாகச் சொல்லுகிறவர்களும் உண்டு. உலகஅமைப்பும், இவைகளிலுள்ள சீவர்களின் அமைப்பும், இவைகளுக்கு அனுசரணையாக பஞ்சபூத முதலானவற்றின் அமைப்புகளும் ஒரு இராச்சியத்தில் அரசனுடைய அதிகாரத்தில் காரியங்கள் நடைபெற்றுவருகிறதற்கு மேற்பட்டனவாகவே யிருக்கின்றன. இவைகளை இயற்கையிலுள்ளனவென்று சொல்லமுடியாது. இத்தனை அமைப்புகளும், நடந்தேறும் வகைகளும் ஒருவருடைய அதிகாரத்தில் உள்ளதாகவே யிருக்கவேண்டும் மனிதர் செயலுக்கு மேலான இப்போர்ப்பட்ட அமைப்புகளுக்கும், நடந்தேறும் வகைகளுக்கும் காரணமானவர் தான் கடவுள். இவர் எங்கும் எப்பொழுதும் உள்ளவர் கடவுள் எல்லாம் செய்யவல்லவர். அரசர்களுடைய சட்டதிட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து அரசர்களுடைய தயவை எதிர்பார்ப்பவர்கள் அரசர்களால் மதிக்கப்பட்டு மேன்மையாக்கப்படுவது போல கடவுளுடைய சிருட்டியிலுள்ள எந்தச்சீவர்களையும் இம்சைசெய்யாமல் எல்லாச் சீவர்கள் பேரிலும் இரக்கப்படுவதோடு கடவுளுடைய தயவையும் எதிர்பார்த்தால் தான் எல்லா வகைகளிலும் மேன்மை அடையலாம்.

நாட்டில் அரசன் இல்லை, சட்டதிட்டங்கள் இல்லைஎன்று சொல்லி மனம் போனபோக்காய்த் துன்மார்க்கமாகநடப்பவர்கள் இராசதண்டனைக்கும், கஷ்டத்திற்கும் உள்ளாகுவதுபோல், கடவுள் இல்லை என்றும், பாவம் புண்ணியம் இல்லை என்றும் சொல்லி மனம்போன போக்காய்த் தீமையான காரியங்களைச் செய்து நடந்துவருபவர்களும் கடவுள் தண்டனைக்கும் கஷ்டத்திற்கும் உள்ளாகக்கூடும்.

சீவர்களுக்குப்பிறவி இல்லை என்று சொல்லமுடியாது மரம் இருக்கிறவரை விதையும் விதையிருக்கிறவரை மரமும் உண்டு என்று தெரிவது போல, சீவன் இருக்கும்வரை இறப்பும், பிறப்பும் உண்டு. மனிதர்கள் சீவியத்தில் நடந்துகொள்ளும் செய்கைக்குத்தகுந்த பிரகாரந்தான் பிறவிகளும், போகபோக்கியத்தை அடையுந்தன்மைகளும் உண்டு.

சீவன்வேறு கடவுள்வேறு என்று கிடையாது பொன்பல பணிகளாதல் போல் கடவுள்தானே எல்லாத் தோற்றமாகவுமிருக்

இருர் இதை மாற்றி நினைப்பதே அஞ்ஞானமென்றும் மாற்றி நினையாததே ஞானமென்றும் சிலர் கொள்கை உண்டு. கேவலம் வினைக்கு ஈடாகப் பிறவியெடுத்து சுக துக்கங்களில் மோதல்பட்டு அல்லல்படும் நிலைமையில், நன்மை தீமைகள் தெரிந்து நடந்து கொள்ளாமைக்காகவே எல்லாம் பிரமம்என்று வாய்ஞானம் பேசிக்கொள்ளுவதைத் தவிர வேறில்லை. பொன் தானாக பலபணிகள் ஆகமாட்டாது வேறொருவரால் தான் பலபணிகளாக்க வேண்டும் இதுபோலவே வேறொருவரிருந்து பல தோற்றங்களாக உண்டாக்க வேண்டுமென்று ஆகிறது. இது அனுபவப்பிரமாணத்திற்கு ஒத்ததல்ல சீவச்செயல் உள்ளவரைக்கும் சுகதுக்கங்களும், இறப்புப்பிறப்புக்களும் உண்டு. மானாபிமானங்களும், மனைவி மகள் இனிப்பு கசப்பு என்ற பேதங்களும், பரிசம் முதலிய உணர்ச்சிகளும், சுகதுக்கங்களும், போக போக்கிய இச்சைகளும் நீங்கினஇடத்தில் தான் சீவச்செயல்கள் இல்லாமல் இறப்பும், பிறப்பும் அற்று கடவுளின் தோற்றம் ஆகலாம் கேவலம் உடுக்க உடையில்லாமலும், உணவிற்கு ஆகாரம் இல்லாமலும் தத்தளிக்கிற ஒருவன் நாமும் அரசனும் ஒன்றுதான் என்றும், அரசன் தான் நாமும்என நினைத்துப்பேசிக்கொண்ட மாத்திரத்தில் அரசனாகி இராசபோக போக்கியங்களை அடைந்துவிட முடியாதது போலவே வினைக்கு ஈடாகப்பிறந்த மனிதர்கள் நன்மைதீமைகள் இன்னதென்று தெரிந்து, தீமையான காரியங்களில் தலையிடாமலும் நன்மையான காரியங்களைக் கைப்பற்றியும் எல்லாச் சீவர்கள் பேரிலும் இரக்கங் காட்டியும், திரிகரணசுத்தியாய் மனவாக்குக் காயங்களால் கடவுளை வணக்க முதலியசெய்தாலல்லது இம்மை மறுமைப்பயன்களை அடைய இயலாது.

உலகத்தில் மதப்பிரிவுகளும் எண்ணிறைந்த சுவாமிப்பெயர்களும் இருந்துவருகின்றன. ஒரேவிதமான சாமானைப் பலதொழிற்சாலைகளில் செய்வதில் ஒன்றுக்கொன்று வித்தியாசங்கள் இருப்பது போல் பலகடவுள் இருப்பதானால் உலகத்திலுள்ள சிருட்டிகளில் ஒவ்வொன்றும் பற்பலவித்தியாசங்களாக இருக்கவேண்டும். இப்படி ஒவ்வொன்றும் பற்பல வித்தியாசங்களாக இல்லாமையால், கடவுள் ஒன்றுதான் என்று ஆகிறது, உலகத்தில் பாஷைகளும் நடைமுடிக்கைகளும் பலவிதம் இருப்பதற்கு இசைந்த பிரகாரம் கடவுளை வழிபடுதலுக்காகவும், நீதிமார்க்கத்திற்காகவும் மதம் என்று பலபிரிவுகளாய்ப்

பாவிப்பதாக இருக்கிறது. மதம் என்பது நீதிமார்க்கத்திற்காகவும் கடவுளை வழிபடுவதற்காகவும் பலவகையாய் வைத்திருப்பதைத்தவிர மதக்கொள்கையில் உண்மைக்கடவுள் இல்லை. மதக்கொள்கைக்கு மேற்பட்ட நிலையில்தான் கடவுளுடைய நிச்சயமிருக்கிறது. இப்படி மதங்களுக்கு அதீதமான கடவுளுக்கு மனைவி என்றும், மக்கள் என்றும், மாமன், மாமி என்றும், மைத்துனன் என்றும், சுற்றத்தார்கள் என்றும் இல்லை சிலமதக்கொள்கையுள்ளவர்கள் ஒவ்வொரு இடங்களிலும் நாகரீகமாகவும், சுகாதாரத்தோடும் கட்டிடங்கள்கட்டி மேற்படி கட்டிடங்களுக்கு இஷ்டமான சகலரும் காலை, மாலை அல்லது காலையும் மாலையும் என்று நிச்சயித்தபிரகாரம் போயிருந்து, அந்த இடத்தில் குறிப்பிட்ட தலைவரால் நீதிமார்க்கங்களையும், பக்தி மார்க்கங்களையும் சொல்லப்படுவதோடு, எல்லோரும் கடவுளை நினைத்து செபஞ் செய்து வருவதாக இருக்கிறது. இந்தமார்க்கத்தில் யாதொரு ஆடம்பரங்களும், வேடிக்கை, விநோதங்களும், வீண்செலவுகளும் இல்லை. இந்துமதத்தில் நடந்துவருகிற கொடுமைகள் பூராவையும் எடுத்து எழுதுவதற்கும், சொல்லுவதற்கும்இரண்டாயிரங்கைகளும், ஆயிரம் நாவுகளுமிருந்தாலுங்கூட முடியாது. கோவில்களும், சுவாமிகளும் எண்ணிமுடியாது. கோவில்கள் சுகாதாரப்பிரகாரமும், நாகரீகமாகவும் கட்டப்படவில்லை கோவிலுக்குள் சுவர்களிலும், தூண்களிலும் சாய்வதற்கும் தரையில் உட்காருவதற்கும், மனசு சகிக்க முடியாது. பெரும்பாலும் எண்ணெய் பூசப்பட்டும், சிந்தப்பட்டு மிருக்கிறது. அதோடும் வௌவால், அணில், பூனை, பெருச்சாளி, எலி, பாம்பு. மாடு, யானை, முதலானதுகளால் கழிக்கப்பட்ட மலசல நாற்றங்கள் நிறைந்துள்ள தாகவுமிருக்கிறது. காற்றுகள் போய் வருவதற்கும் வெளிச்சங் கொடுப்பதற்கும் சன்னல்கள் கிடையாது. கோபுரங்களிலும், சுவர்களிலும், தூண்களிலும் ஆபாசமாகவும் நிருவாணமாகவும் இன்னும் பலவிதங்களாகவும் உருவங்கள் செய்து வைக்கப்பட்டிருத்தலைப் பார்ப்பவர்கள் பெரும்பாலும் நாணப்படக்கூடியதாகவும், அருவருக்கக்கூடியதாகவும் இருக்கிறது. கோவிலுக்குள் நீதிமார்க்கங்களையும், பக்திமார்க்கங்களையும் போதனைசெய்து சனங்களை நல்வழிப்படுத்தக் கூடிய வகைகள் பெரும்பாலும் இல்லை. கோவிலுக்குள்ளும், கோவில் வாசல்களிலும் வேடிக்கைச் சாமான்களும், ஆடை ஆபரணாதிகளும், திண்பண்டங்களும் விற்கும் கடைகள் வைக்கப்பட்டு, மேற்படிகடைகளில் வாங்கல்; விற்றல் செய்வதில்

ஏற்படும் சண்டை, சச்சரவு, கலகம் முதலானவைகள் பெரும்பாலும் கோர்ட்டுக்குப்போய் முடிந்து தீருகின்றன. கோவிலுக்குள் இன்னாரின்னார் போகக்கூடாதென்றும், இன்னாரின்னார் இவ்வளவு தூரந்தான் போகலாமென்றும் சிலவிடங்களில் சுவாமியைப்பார்ப்பதற்குப் பணங் கொடுக்கவேண்டும் என்றும் திட்டப்படுத்தி வைத்திருக்கிற கொடுமைகளும் இருக்கின்றன. கோவில்களுக்குள் மூலவிக்கிரகம்என்றும், எழுந்தருள் விக்கிரகம்என்றும் பலவிதமாக உருவங்கள் உண்டு பண்ணி அவைகளுக்கு ஆடை ஆபரணாதி அலங்கிருதங்கள் செய்தும் அபிஷேகம் என்றும், நைவேத்தியம் என்றும், ஒன்று முதல் ஆறு காலப்பூசையென்றும், சுவாமிகளுக்கு கலியாணம் என்றும் தேர், திருவிழாக்கள், காட்சி கொடுத்தல், தீர்த்தங்கொடுத்தல் என்றும் இன்னும் பலகிரியைகள் என்று செய்வதும் இவைகளில் உண்டாகிற சண்டை, சச்சரவு, கொள்ளை, கொலை, கோர்ட்டுவிவகாரங்களும் நடந்தவண்ணமாக இருக்கின்றன. யார்செய்த பாவங்களோ எவர் செய்தகொடுமைகளோ சனங்களுக்கு சீவாதாரமான பொருள்கள் வீணாகநாசத்தை அடைவதோடு மறுமைப் பயனை அடைவதற்கு இல்லாமலுங் கெடுவதற்கு ஏதுவாக இருக்கிறது. மனிதர்களுடைய மனது, எதிரில் காணப்படுகிற விஷேதங்களில் பற்றுகிறது உண்டு. இதனாலேதான் முன்னோர்களில் நல்வழிநடந்து மறுமைப்பயனை அடைய நினைத்தவர்கள் பெரும்பாலும் மனிதர்கள் சஞ்சாரம் இல்லாத வனங்களுக்குப்போய் தபசெபம்செய்து வந்ததாகத்தெரிகிறது. கோவிலுக்குள்போய் சுவாமியைக் கும்பிட வேண்டுமென்றவர்களுடையமனது தேர், திருவிழா, வேடிக்கை, கடைச்சாமான்கள், ஆடை, ஆபரண முதலான அலங்கிருதங்கள் முதலியவைகளிலேபுகுந்து கூத்தாடுமேயொழிய மனதை விடயங்களில் விடாமல் ஒடுக்கி நிச்சித்தமாயிருந்து பக்திமார்க்கம் செலுத்தமுடியாது.

சனங்களுடைய பக்தி மார்க்கங்களுக் காகத்தான் கோவில்கள் என்று கட்டி எழுந்தருளும் விக்கிரகங்கள் செய்து அவைகளுக்கு கலியாணங்கள், தேர், திருவிழாக்கள் என்று செய்து, வரப்படுகிறதென்றும் இப்படிச்சுவாமிகளை கலியாணங்கள், தேர் திருவிழாக்களில் எடுத்து சனங்கள் வசிக்கும் முக்கியவிடங்களில் கொண்டுபோய் வருவதினாலேதான் அவைகளைப்பார்த்தமட்டில் சனங்களுக்கு சுவாமியென்று நினைவு உண்டாகிறதென்றும் சிலர்சொல்லுகிறார்கள். நமக்கு நிலாக்காட்டிச் சோறூட்ட வேண்டிய பருவம் நீங்கிவிட்டது,

உலகத்தில் உள்ள நாலாபக்கத்து நடவடிக்கைகளும் தினப்படி தெரிந்து வரக்கூடியதாயிருக்கின்றன. மனிதர்களுக்கு பகுத்தறிவு உண்டு என்றும் இதனால் எல்லாம் செய்யமுடியும் என்று கண்டுகொண்டவர்கள் நீராவியாலும், மின்சாரத்தாலும், பெட்ரோல் எண்ணெயாலும் இன்னும் அநேக வகைகளாலும் நிமிஷந்தோறும் அற்புதமான காரியங்களைச் செய்து வருவதைப் பார்த்துக்கொண்டு வருகிற இந்தக்காலத்திலா பலவிதமாக விக்கிரகங்கள் செய்து அவைகளுக்கு ஆடை ஆபரணாதி அலங்கிருதங்கள் செய்து வாகன முதலானதுகளில் வைத்துக்கட்டித் தூக்கிக்கொண்டு வருவதைப் பார்த்தமட்டில் கடவுள் பக்தி உண்டாக வேண்டும்.

இந்தியாவில் பெரும்பாலும் சனங்களுக்கு வசிப்பதற்குப் போதுமான மனைகளும், உடுத்துவதற்குப் போதுமான உடைகளும், உண்பதற்குப்போதுமான ஆகாரங்களும், விவாகங்கள் செய்து கொள்ளுவதற்குப் போதுமான பணங்களும் இல்லாமையாலேதான் சனங்கள் கஷ்டங்களையும், வறுமைகளையும் அடைவதோடு அநேகர் சிலோன், பர்மா, பினாங்கு, சிங்கப்பூர், சாவா, ஆப்பிரிக்கா முதலான வெளிநாடு களுக்குப்போய் இந்தியாவின் பெயருக்கே அவமானத்தை உண்டாக்கக்கூடிய விதமாய் நடந்து வருகிறார்கள். இந்த நிலைமையிலேதானா கோவில்கள், கோபுரங்கள், தேர்கள், திருவிழாக்கள், திருக்கலியாணங்கள் என்று கோடிக்கணக்கான பணங்களை நாசப்படுத்த வேண்டும். இப்படி வீணாகச் செலவாகும் பணங்களைக் கொண்டு பலவிடங்களிலும் கல்விச்சாலைகளையும், வைத்தியசாலைகளையும், கைத்தொழிற்சாலைகளையும், கூட்டு வியாபாரங்களையும், பாங்குத் தொழில்களையும் இன்னும் சனங்களுக்கு வேண்டிய காரியங்களையும் உண்டுபண்ணுவதானால் இப்பொழுது அவமானத்தையும், கஷ்டத்தையும் அடைவதற்காக வெளிநாடுகளுக்குப் போகப்பட்டவர்களெல்லாம் நம்முடைய நாட்டுக் கல்விச்சாலைகளிலும், தொழிற்சாலைகளிலும் படித்துத்தேர்ச்சியாகி மேல் நாட்டார்களைப்போல் அரிய பெரியகாரியங்களையும், நூதனமான காரியங்களையுஞ்செய்து மேலான வாழ்க்கையை அனுபவிக்கக் கூடுமல்லவா?

இமயமலையிலிருந்து இயற்கையாய் உண்டாகி வருகிற கங்கை யென்னும் நதியை பகீரதன் என்பவன் தன்னுடைய முன்னோர்கள் இறந்து அவர்களைத் தகனஞ் செய்து கிடந்த சாம்பல்களைக் கரைத்து

விடுவதற்காகவே அறுபதினாயிரம் வருஷம் கடவுளைக்குறித்துக் கடுந் தபஞ்செய்து கயிலாசத்திலிருந்து கொண்டுவந்தான்என்று சொல்லப் படுவதோடு, தெய்வமாகவும் பாவித்து காணிக்கையென்று பண்டங் களையும், பணங்களையும் போட்டுவருகிறதாயிருக்கிறது. அப்பொழுது இருந்து வந்துகொண்டிருக்கும் இந்தநதி ஓட்டத்தால் பகீரதனுடைய முன்னோர்கள் இறந்து தகனஞ்செய்து கிடந்த சாம்பல்கள் இன்னும் கரைந்து போகாமலாயிருக்கிறது. அந்தச்சாம்பல்கள் கரைந்துபோகப் பட்டிருந்தால் அதற்கென்று கொண்டுவந்த நதி அந்தமட்டில் நின்று போயிருக்குமல்லவா? மேற்கு மலைத்தொடரில் உற்பத்தியாகி சனங் கள் பிரயோசனத்திற்கு உதவாமல் அரேப்பிக்கடலிலே போய் விழு ந்து வந்தநதியை கவர்ன்மெண்ட் என்ஜினீர் டாக்டர் பெனிகொக் என்பவரின் ஆலோசனையால் வேண்டிய வகைகள் செய்து மதுரை ஜில்லாவிற்குக் கொண்டுவந்திருப்பதைப் பார்த்தமட்டிலாவது, பகீர தனையும், அவன் கடுந்தபஞ்செய்து கொண்டு வந்தான் என்று எழுதி வைத்திருக்கிற கதைகளையும் மறந்துபோகவேண்டாமா? டாக்டர் பெனிகொக் என்பவரின் ஆலோசனையால் திருப்பிக்கொண்டு வந் திருப்பது போலக் கூடகங்கை நதியென்று சொல்லக் கூடியது வேறு பக்கத்திற்குப் போய்க்கொண்டிருந்து அதை இந்தப்பக்கம் திருப்பிக் கொண்டு வந்தமாதிரிக்கான தோற்றங்கள் கூடக்கிடையாது. டாக்டர் பெனிகொக் என்பவர் ஆலோசனையால் சனங்களுடைய பிரயோசனத் திற்காக நதியைத்திருப்பிக்கொண்டு வந்தமாதிரி இன்னமும் வீணா கப் போய்க்கொண்டிருக்குந் தண்ணீர்களைத்தெரிந்து அவைகளையும் சனங்களுக்குப் பிரயோசனப்படக்கூடிய பக்கங்களில் திருப்பிக் கொண்டு வரப்பார்க்கவேண்டியதுதான் மனிதர்களுடைய பகுத்தறி வுக்கு ஒத்ததாகும்.

தேங்காய், பழங்கள், வெற்றிலை பாக்கு, புட்பங்கள், சூடன் முதலான சாமான்களை வாங்கிக்கொண்டுபோய் அருச்சகர் கையில்க் கொடுத்து தேங்காயை உடைத்தும், பழங்களை உரித்து வைத்தும், புட்பங்களை விக்கிரகங்களுக்கு சாத்தியும், சூடத்தைக் கொளுத்தி வெளிச்சத்தை உண்டுபண்ணியும், அருச்சகருக்கு தாருக்காகப் பண த்தைக்கொடுத்து அவரால் விக்கிரகங்களிடம் தனக்குப்பணங்கொடுத் தவர்களெல்லாம் சகல பாக்கியங்களையும் அடையவேண்டுமென்று அருச்சனை செய்து சொல்லப்படுவது மூலமாக உண்மை பக்தி உண் டாகி சகல பாக்கியங்களையும் அடைந்துவிட முடியாது.

குளிக்கப்போனவர்கள் சேற்றை வாரிப் பூசிக்கொள்ளுவது போல, பக்தி மார்க்கங்கள் என்று சனங்களின் இம்மைப்பயனுக்குரிய பொருள்களை அனியாயமாக நாசப்படுத்தி, மறுமைப்பயனையும் அடைய முடியாதென்றிருக்கும் காரியங்களைப்பற்றி நன்றாய் ஆலோசனை செய்து நடந்துகொள்ள வேண்டியது நியாயமாகவும், அவசியமாகவும் இருக்கிறது.

வியாபாரச் சங்கம்.

மனிதர்களுடைய ஜீவியத்திற்கு வேண்டிய வகைகளையெல்லாம் ஒவ்வொருவர்களும் தாங்களாகவே செய்துகொள்ளாமல், பலருடைய முயற்சியால் செய்து உதவப்பட்டு வருகிறது. முக்கியமாய் விவசாயம், கைத்தொழில், வியாபாரம் என்றவகைகளில் உள்ளதாக இருக்கிறதென்பது எல்லோருக்கும் தெரியும். மனிதர்களுடைய அறிவும், ஊக்கமும், செல்வாக்கும் எல்லோருக்கும் ஒன்றுபோல் இருப்பதில்லை இதனால் ஒவ்வொருவர்களும் தனித்த நிலைமையில் எதையும் மேன்மைக்குக்கொண்டுவர முடியாது. ஒவ்வொரு வகையிலுமுள்ள பலரும் ஒன்றுசேர்ந்து சங்கங்கள் உண்டாக்கிச்செய்வதனால் பலரும் சங்கத்தில் பேசப்பட்டு மேலான அபிப்பிராயங்கள் உண்டாகியும், பலருடைய ஒத்தாசையாலும் அரிய பெரிய காரியங்களும், நூதன வகைகளும் செய்ய ஏதுக்கள் ஆவதோடு, உலகத்தில் மதிக்கக்கூடிய தன்மைகளும் உண்டாகக்கூடும். இத்தன்மையை உணர்ந்த மேல் நாட்டார் ஒவ்வொருவகைக்கும் சங்கம் உண்டாக்கி அதுமூலமாய்ச் செய்யப்பட்டு வருவதினாலேதான் அவர்களுக்கு கவர்ன்மெண்டு ஒத்தாசையும் எளிதாகக் கிடைத்து எல்லாவகைகளிலும் அவர்கள் மேலான நிலைமையில் இருக்கிறார்கள். இந்தியாவில் விளையக்கூடிய பஞ்சை மேல்நாட்டார் வாங்கிக்கொண்டு போய் அவர்களுடைய தொழிற்சாலைகளில் நூற்று நெய்யக்கூடியதில் அவர்களுடைய சாதகத்திற்காகவே அவர்களுடைய சங்கத்தின் அறிவிப்பின் மூலம் கவர்ன்மெண்டால் பருத்திவிதைப் புக்களையும், பருத்தி பஞ்சு போக்குவரத்துக்களையும் கட்டுப்படுத்தி வரக்கூடிய தன்மைகள் நம்மில் அநேகருக்குத் தெரியக்கூடும். நம்முடைய நன்மைக்காவது, தங்களுடைய நன்மைக்காவது கவர்ன்மெண்டார் தலையிட்டதல்ல அவர்களுடைய நாட்டிலுள்ள சங்கத்தார்கள் வேண்டுதலுக்காகவே தலையிட்டு அவர்களுக்கு வேண்டிய வித

மாகஞ்செய்து வருகிறார்கள். எல்லாவற்றிற்கும் சங்கங்கள் உண்டானால் தான் ஒவ்வொரு இடத்தில் உள்ள குற்றங்குறைகளைத் தெரிந்து அவைகளை நீக்குவதற்கும், நூதன வகைகளைப் பிரசித்தம் செய்வதற்கும், கவர்ன்மெண்டின் ஒத்தாசை பெறுவதற்கும் ஏதுவாயிருக்கக் கூடும்.

இதில் எடுத்துக்கொண்ட விஷயம் வியாபாரச்சங்கம். விவசாயத்தாலும், கைத்தொழிலாலும் உண்டாக்கப்படும் பொருள்களை வாங்கல், விற்றல் செய்வதுதான் வியாபாரம் விவசாயத்தாலும், கைத்தொழிலாலும் உண்டாக்கப்படும் பொருள்களைப்பற்றிய நயமிதம் வியாபாரக் கூட்டத்தாரால் கண்டுபிடிக்கப்பட்டு பிரசித்தப்படுத்தக் கூடியதாயிருக்கிறது. இதனாலேதான் உலகத்தில் வியாபாரத் தொழில் மேலான தன்மையாய் இருந்து வருகிறது. இதன் உண்மை தெரிந்த மேல்நாட்டார் கையில்தான் பெரும்பாலான வியாபாரங்கள் இருந்து வருகிறது. அவர்கள் பெரும்பாலும் நம்பிக்கை விரோதஞ் செய்கிறதில்லை. எந்தவகைகளிலும் பெரும்பாலும் ஆராய்ந்து பார்த்துத்தான் தலையிடுவதுண்டு. ஒவ்வொரு வகையிலும் பலரும் ஒன்று சேர்ந்து சங்கம் உண்டுபண்ணி அதன் மூலமாய் எல்லாவிடத்துச் சாதகத்தையும் எளிதாக அடைந்து கொள்ளுகிறார்கள். இந்தியர்களுக்குப் பெரும்பாலும் எந்தவூரில் எந்தத்தொழில் எத்தனை பேருக்குக் கட்டும் என்று பார்த்து ஆரம்பிக்கிற சுபாவமும், தொழிலை அவநம்பிக்கைப் படுத்தினால் பின்னால் நடைபெற மாட்டாதென்ற உணர்வுங் கிடையாது அதோடு பலரும் ஒன்றுசேர்ந்து சங்கம் உண்டாக்கி அதுமூலமாய் பலவிடத்துச் சாதகத்தையும் அடைய வேண்டுமென்ற விருப்பங்களுங்கிடையாது.

வியாபாரிகளுக்கு முக்கியமாய் வேண்டிய சாதனங்களில் தந்தி, தபால், ரயில், கப்பல் இவைகளில் உண்டாகும் கஷ்ட நஷ்டங்களைப் பற்றி ஒவ்வொருவர்களும் தனித்தனியாய் எடுத்துக்காட்டி பூராக் கஷ்ட நஷ்டங்களை நிவிர்த்தி செய்துகொள்ள முடியாது.

முனிசிபாலிடி வரிகளும், வருமானவரியும் வியாபாரிகளைக் கஷ்டப்படுத்தக் கூடியதாயிருக்கிறது. இந்தியர்கள், ஐரோப்பியர்களைப் போல் எல்லோரும் படித்துப்பாஸ் செய்து வியாபாரஞ் செய்து விபரத்தோடு கணக்கு முதலியது வைத்து பூரக் கூடிய மாதிரியைப்

போலில்லை. ஏதோ தெரிந்தபிரகாரமும், வழக்கப்பிரகாரமும் வியாபாரஞ்செய்து கணக்கு முதலியது வைத்துவரக்கூடியதாயிருக்கிறது. வருமானவரி என்பதற்கு எந்தமாதிரியிலாவது கைக்குக் கிடைக்கப் பட்டிருக்கும் வருமானங்கண்டு அதற்கு மாத்திரம் வரி விதிக்க வேண்டியதிருக்க பெரும்பாலும் கணக்கு சரியாயில்லை, விபரங்கள் நன்ருய் துலக்கப்படவில்லை என்றுசொல்லியும் இன்னும் பலகாரணங்கள் காட்டியும் அருத்தமற்றவிதமாய் அதிகாரிகளால் வரி விதிக்கப் பட்டு பணஞ்செலுத்தித் தீருகிறது. கஷ்ட நஷ்டத்தை அடைந்தவர்கள் சிவில்க்கோர்ட்டுகளின் மூலம் பரிகாரந் தேடிக்கொள்ள முடியாமல் சட்டத்தின்மூலம் தடைசெய்யப்பட்டிருக்கிறது. சட்டத்தைத் திருத்துவதற்கு சட்டசபையில் வியாபாரிகளுக்கு மெஜாரிட்டி மெம்பர்கள் இல்லை சட்ட சபையில் வருமானவரியைப்பற்றி சிலர் எடுத்துப்பேசியதில் ரூபாய் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட வருமானத்திற்குத்தான் வரி விதிக்கப்படுகிறதென்றும், விபரமாய் கணக்கு வைத்துக்காண்பிக்க வேண்டியதுதான் அவசியம் என்றும் அநேகர் சொல்லி தடைசெய்து விட்டார்கள். வியாபாரிகளில் அதிகமாய் சட்ட சபையிற் போயிருக்கக்கூடுமானல் வியாபாரிகளுடைய பழக்க வழக்கங்களையும், கஷ்ட நஷ்டங்களையும் திடமாயெடுத்துப்பேசி சட்டங்களை சாதகமாய்ச்செய்யக்கூடுமல்லவா?

கொள்ளை, கொலை முதலிய கேஸ்களை விசாரித்துப் பரீட்சித்தல் செய்யப்படுவதில் அற்பசந்தேகம் உண்டானாலும் அப்படிக்கான சந்தேகத்தை எதிரிகளுக்குக் கொடுக்கவேண்டுமென்ற சட்டப்படி கைதிகளை விடுதலை செய்துவரும் காருண்ய நமது கவர்ன்மெண்டில் வியாபாரிகள் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடந்துகொள்ளுவதில் வருமானத்திற்காக கணக்குகளைப்பரீட்சித்தல் செய்யப்படுவதில் அதிகாரிகளுக்கு அற்பச் சந்தேகம் உண்டானாலும் அந்த மட்டில் இஷ்டம் போலெல்லாம் வரிவிதிக்கும் வழக்கமாயிருந்துவருகிறது. கொள்ளை, கொலை முதலியது செய்த குற்றவாளிகளுக்குக்கிடைக்கும் அனுகூலங்கள்கூட வருமானவரி செலுத்தப்படுகிறவர்களுக்குக் கிடைப்பதில்லை. வாயில்லாப் பூச்சிகளைப்போல் இருந்து வரக்கூடுமானல் இன்னமும் அதிகக் கஷ்ட நஷ்டங்களையும், அலக்கழிவுகளையும் அடைய நேரிடும்.

காலதேசவர்த்தமானத்தை அனுசரித்து வியாபாரிகளும் முறைப்படி வியாபாரச்சங்கம் ஏற்படுத்தி அதில் பலரும் சேர்ந்து

சட்ட திட்டங்களும், பண்டுகளும் உண்டுபண்ணி வைத்து வியாபாரிகளுடைய கஷ்ட நஷ்டங்களைப் பற்றி நன்றாய் ஆலோசனை செய்து அதிலுள்ள முடிவைப்பற்றி சங்கத்தின் மூலமாகவே வேண்டிய வேலைகள் செய்தால் நமது காருண்ய கவர்ன்மெண்டின் அனுதாபத்தால் எல்லாக் கஷ்ட நஷ்டங்களும் நீங்கி வேண்டிய நன்மைகளை அடைய ஏதுவாகக் கூடும்.

நாடார்களாகிய நம்மவர்களுக்கு ஓர் விக்கியாபனம்.

நாம் மதுரையை ஆண்டுவந்த அரசர் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்பதற்கு அநேக ஆதாரங்களும், இன்னும் நடந்துவரக் கூடிய பழக்க வழக்கங்களும் உண்டு. நமது இராச்சியத்தை அபகரித்துக்கொண்டவர்களால் நம்மைப் பலவகைகளிலும் ஒடுக்கி வைக்கப்பட்டதைத் தவிர, வாஸ்தவத்தில் நாம் ஒடுக்கப்பட்டவர்களல்ல. மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி இந்த ஜில்லாக்களின் பல பாகங்களில் நமக்குச் சமத்துவமில்லாமலிருக்கிறதேயொழிய மற்ற ஜில்லாக்களிலும், மதுரை ஜில்லாவில் சிலபாகத்திலும் சகல வகைகளிலும் நமக்கு சமத்துவம் இருந்துதான் வருகிறது. நாம் ஒடுக்கப்பட்டவர்களாகவே யிருந்தால் எல்லா ஜில்லாக்களிலும் எல்லா விடங்களிலும் ஒரேபடித்தாய் ஒடுக்கப்பட்டிருப்போம். மதுரையை அரசுசெய்தவர்களுடைய எல்கைக்குள் செய்து வைத்த கொடுமையைத்தவிர வேறில்லை. இராச்சியத்தைக் கைப்பற்றியவர்கள் முந்திய அரசர்களையும், அவர்களைச் சேர்ந்தவர்களையும் கொலை செய்துவிடுவதும், ஒடுக்கப்படுத்தி வைப்பதும் வழக்கத்தில் உள்ளதுதான். இராச்சியத்தை இழந்தவர்களும், அவர்களைச் சேர்ந்தவர்களும் எப்பவும் விரோதமாயிருந்துவருவார்கள் என்ற பயம் பிந்தியவர்களுக்கு இருந்துவரக்கூடியது சகசந்தான். ரசியாச் சக்கரவர்த்தியையும், அவர் குடும்பத்தார்களையும் ஒரு கிராமத்தில் சிறிய வீட்டில் கொண்டுபோய்வைத்திருந்து அப்பால் கொலைசெய்துவிடப்பட்டதும், ஜெர்மனி சக்கரவர்த்தியை ஆலண்டுதேசத்தில் பந்தோபஸ்து செய்து வைக்கப்பட்டிருப்பதும் யாபேருக்குந்தான் தெரியாது. நாம் ஒடுக்கப்பட்ட நிலைமையிலேயே இன்னமும் இருந்துவரவேண்டிய அவசியமில்லை நம்மை ஒடுக்கிவைத்தவர்களுடைய அரசும், அதிகாரங்களும் இப்பொழுது கிடையாது.

அரசர்களுடைய பழக்க வழக்கத்தை அனுசரித்து நமக்கு இன்னமும் பலவிடங்களில் பேட்டை முதலான விடுதிகளும், மகமைப் பண்டுகளும், முறைகாரர் என்ற பட்டங்களும் இருந்துவருகிறது. முன்னாளில் உண்டான ஆராச்சிக்குத்தகுந்த பிரகாரம் பக்திமார்க்கத்திற்காக கோவில்கள் என்றும், திருவிழாக்கள்என்றும் உண்டுபண்ணி வைத்திருப்பதாகத் தெரிகிறது. அந்தக் காலத்தில் இந்தியாவைப் பல பாகங்களாக வெவ்வேறு அரசர்களால் ஆளப்பட்டு வந்தபடியால் பெரும்பாலும் ஒரு அரசனுக்குட்பட்டவர்கள் மறு அரசனுடைய நாட்டுக்குப் போகவும், ஒருநாட்டுக்கொருநாடு உணவு மற்றச் சாமான்கள் கொடுத்து வாங்கிக்கொண்ட வழக்கங்களும் இல்லாமல் அடிக்கடி பஞ்சமும், கொள்ளையும், கலகங்களுமாக இருந்து வந்திருப்பதாகவே தெரிகிறது. இந்த நிலைமையில் யார்தான் விசேட ஆராச்சி செய்து நூதன வழிகளைப் பின்பற்றியிருக்கக்கூடும். இப்பொழுது பல அரசர்களுடைய அதிகாரங்களும், ஒருநாட்டுக்கொருநாடு போக முடியாத கொடுமைகளுங் கிடையாது. இந்தச் சந்தர்ப்பத்தில் பழைய வழக்கங்களும், அறியாமைகளும் வேண்டியதில்லை.

மனித சன்மம் எடுத்த எவர்களும் சீவியத்தில் மேன்மையாய் வாழ்வதற்கு இச்சை கொள்ளுவதுதான் இயற்கை. இதை அனுசரித்துத்தான் உலகத்திலுள்ள அநேக சாதியார் தங்களுடைய ஆராச்சியால் நூதனமான வகைகளைக்கண்டு மேன்மைகளை அடைந்தும், அடைந்துவருவதோடு வேறுகண்டத்திற்குப் போய்வருவதற்கு யோசனைசெய்துகொண்டும் வருகிறார்கள். இப்படிக்கானகாலத்திலும் நம்மவர்களுடைய மகமைப் பணங்களும், சொந்தப் பணங்களும் கோவில், தேர், திருவிழா, மண்டபம், பிரார்த்தனை, காணிக்கை, யாத்திரை முதலான அருத்தமற்றவகைகளில் அனியாயமாய்ச்செலவு செய்யப்பட்டு வரக்கூடியதாயிருக்கிறது. கடவுள் நமக்கு வீடும், ஆடையும், ஆகாரமுங் கொடுத்து உதவிசெய்து விவாகங்களும் செய்துவைக்க வேண்டுமென்று பிரார்த்தித்துப் பெற்றுக்கொள்ள வேண்டியதிருக்க, சனங்களால் கடவுளுக்கு வீடு கட்டிக் கொடுத்தும், ஆடைகளும், ஆகாரங்களுங் கொடுத்து உதவப்பட்டு விவாகங்களுஞ் செய்துவைக்கப்படுகிறகாரியமானது சிறுபிள்ளைகள் விளையாட்டாகச்செய்யக் கூடியகாரியங்களை ஒத்தமாதிரியே யொழிய வேறு விசேடமானதென்று சொல்ல முடியாது. கடவுளுடைய உண்மை

பக்திக்கு இவைகளெல்லாம் காரணமாக மாட்டாது. மனிதர்களுடைய சுபாவங்கள் பெரும்பாலும் தங்கள் தங்கள் மேன்மைகளை மட்டும் கவனித்துக்கொள்ளுவதுண்டு. இப்படிக்கான தன்மையில் நம்முடைய மேன்மைக்காக நாமே காரணமாயிருந்து கொள்ளவேண்டுமே யொழிய பிறரை யெதிர்பார்த்துக் கொள்ளுவதில் முடியாது.

நம்மைப்பற்றி யாரும் ஒடுக்கப்பட்டவர்கள் என்று சொன்ன மாத்திரத்தில் சிலர் ஆத்திரமும், ஆவேசமுங்கொண்டு உடனே கண்டனமும், பகிஷ்காரமுஞ்செய்து விடக்கூடியதாயிருக்கிறது. இதனால் மேலிட்டும் துவேஷங்கள் உண்டாகுமே யொழிய ஒடுக்கப்பட்ட தன்மை நீங்கிவிடவேமாட்டாது. சிலர் நாகரீகப்பட்டும், செல்வாக்கு அடைந்தும் இருந்தால் இப்படிக்கானவர்கள் முன்னிலையில் ஒடுக்கப்பட்டவர்கள் என்று சொல்லமுடியாவிட்டாலும் பின்பக்கத்தில் இருந்தும், மற்றவர்கள் முன்னிலையிலும் சொல்லப்படவே கூடும். அவையவங்களில் முடமிருக்கும் வரை முடவன் என்று சொல்லக்கூடியது நிற்காது. அவையவங்களில் முடமுள்ளவர்கள் எந்த வைத்தியரிடம் போயாவது முடத்தை சொஸ்தப் படுத்திக் கொள்ள வேண்டும். அதோடு பின்சந்ததிகளுக்கு முடம் வராத தன்மையாகப் பாதுகாத்துக்கொள்ளவும் வேண்டும். இப்படிச்செய்தால்த்தான் முடமும் மற்றவர்களுடைய இளிச்சொல்களும் நீங்கும். சிறிது பாகத்தில் மேலே சொல்லிய காரணம்பற்றி ஒடுக்கப்பட்டிருக்கிற நாமும் ஒடுக்கப்பட்டிருப்பதை நீக்கவேண்டியது நியாயமானகாரியம். விருதுநகர் போன்ற பெரிய பட்டணங்களிலுள்ள சிலர் பென்சு. நாற்காலியிலிருந்து பேப்பர்கள், புஸ்தகங்கள் படித்துக்கொண்டிருந்த மட்டில் நம்சாதியார் பூராவும் இப்படியே யிருப்பார்கள் என்று நினைத்து விடப்படாது. கிராமங்களிலுள்ளவர்களுக்கு அதிகமான குறைச்சல்களும் மற்றவர்களுடைய இம்சைகளும் இருந்து வருகிறது. கிராமத்தார்களுடைய குறைச்சல்களையும், அவர்கள்படும் இம்சைகளையும் அவர்களாலேயே நீக்கிக்கொள்ள முடியாது. கிராமத்தார்கள் தங்களுடைய கஷ்ட நஷ்டத்திற்காக பெரியவூர்க்காரர்களை உதவிக்காக எதிர்பார்ப்பதில் பெரியவூர்களிலுள்ள நம்முடைய முன்னேற்றத்திற்குத் தடங்கலாயிருக்கிற கோவில்கள், தேர்கள், திருவிழாக்கள், மண்டபங்கள், வெள்ளி தங்கவாகனங்கள், அருச்சகர்வருத்தனைகள், வாணவேடிக்கைகள், மேளக்கச்சேரிகள், யானை முதலானதுகள் உதவி வேண்டிவந்த கிராமத்தார்களை பரிகாசஞ்செய்து விரட்டப்பட்டு,

அவர்களும் கண்ணீர் வடித்துக்கொண்டுபோகக் கூடியதாயிருக்கிறது. கோவில்கள், தேர்கள், திருவிழாக்கள் முதலான இந்த வைபவங்களா நம்மை எந்தவகைகளிலாவது முன்னுக்குக் கொண்டுபோய் விடக் கூடும்?

இந்தியாவில் சுயராச்சியம் பெறவேண்டுமென்ற கிளர்ச்சியானது தற்சமையம் சென்னை மகாணத்தில் பிராமணர்களுடைய உரிமைக்கும், மேன்மைக்கும் ஆதாரமாய் அவர்கள் கையடக்கத்தில் இருக்கிறதேயொழிய சகலரும் உரிமைபெற்று சமமாய் வாழவேண்டுமென்ற நோக்கங்களும், காரியங்களுமாயில்லை. பிராமணரல்லாதார் அற்பசொற்பமாய் உத்தியோகம் பார்ப்பதில் பொறாமைப்பட்டு அவர்களுக்கு உபத்திரவஞ்செய்து வரக்கூடிய சுயநலக்காரர்களாகிய சுயராச்சியத்தலைவர்களுடைய புன்மதியைப்பற்றிச்சொல்ல இஷ்டமில்லை சொல்லுவதானாலும் மகாபாரதக்கதையாகவே முடியும். சுயராச்சியத் தலைவர்களான பிராமணர்கள், பிராமணரல்லாதவர்கள் உத்தியோகம் விரும்புவதைப்பற்றி தேசத்துரோகிகள் என்றும், சுயநலக்காரர் களென்றும் வசை பாடுகிறார்களேயொழிய தங்கள் சாதியார் உத்தியோகம் பார்க்கக்கூடியதைப்பற்றியாவது, உத்தியோகத்திற்கு பிரயத்தனஞ் செய்யக்கூடியதைப்பற்றியாவது கடுகளவாவது குறைகூறி வசைபாடவாவது, அவர்களிடம்போய் உபத்திரவஞ் செய்யக்கூடியதாவது கிடையாது. ஜில்லாப்போர்டு பிரசிடெண்டாயிருந்த ஒரு பிராமணர் மறுபடி அந்தஸ்தானம் தனக்குக் கிடைக்காமையால் சைமன் முன்சாட்சி சொன்னபோது இந்தியர்கள் சுயராச்சியம் பெறுவதற்கு யோக்கியமில்லையென்றும், ஸ்தலஸ்தாபனச் சபைகளில் தலைமை வகிக்கக்கூடியவர்களும் இல்லையென்றும் சொல்லியிருக்கிறார் இதுமூலமாகவும் சென்னை மகாணத்தில் உள்ள சுயராச்சியக் கிளர்ச்சியானது யாருடைய நன்மைக்கென்று நன்றாய் விளங்கிக் கொண்டு தானிருக்கிறது. இந்தக் கிளர்ச்சியிலுள்ளவர்களுடைய ஆசைவார்த்தைகளில் சிக்கி நம்மவர்களிலும் சிலர் சுயராச்சியக் கட்சியில் சேர்ந்து நம்முடைய முன்னேற்றத்திற்குத்தடையா யிருப்பதானது, இலங்கையில் பிறந்த விபீடணன் இலங்கையை தனக்குப் பட்டங்கட்டித் தருவதாகச் சொல்லியவைக்காக உடன்பிறந்தானை சதிசெய்தது போலவே யிருக்கிறது. நமக்கு சமத்துவம் இல்லாத நிலைமையில் நமக்கு சுயராச்சியம் எதுக்கு.

இந்தியாவில் சாதிப்பிரிவுகளும், மதக்கொடுமைகளும் இருக்கும் வரை சுயராச்சியம் வேண்டியதேயில்லை. ஆங்கிலேயக்கவர்ன்மெண்டாருக்கு நல்லெண்ணமும், காருண்ய சிந்தையும் உள்ளவரையும் இந்தியாவுக்கு சுயராச்சியங் கொடுக்கவே மாட்டார்கள். ஒருவேளை அசாக்கிரதையால் சுயராச்சியத்தைக் கொடுக்கப்பட்டு விடுவார்களானால், இந்தியாவில் பழைய கொள்ளை, கொலை, கலகம், சண்டை, சச்சரவு, பஞ்சமுதலானதுகள் உண்டாகி சனவிருத்திகளும் குறைந்துபோகவே கூடும்என்பதில் சந்தேகமேயில்லை. வருணாசாரத்தருமச்சபைத் தலைவர் என்னும் ஒருபிராமணர் சைமன்முன் சாட்சி சொன்னபோது தன்னிடம் அதிகாரமிருந்தால் இளம் பெண்களைப் பதறப்பதற இறந்துபோன அவர்களுடைய புருஷர்களின் தேகத்தோடு சேர்த்து மூங்கில்களியால் அமுக்கிக்கொளுத்தியெரித்த உடன்கட்டைச்சட்டத்தை மீண்டும் கொண்டுவருவேன் என்று சொல்லியிருக்கிறார். இரக்கமற்ற இவரும், இவர் சமயமும், வருணாசாரத்தருமமும் மண்மூடிப் புல்முளைத்துப்போவதற்கு இன்னும் எவ்வளவு காலஞ்செல்லக்கூடுமோ பரிசுத்தசிந்தையும், தெய்வத்தன்மையும் பொருந்தியிருந்த திருகாந்திஅவர்கள் சென்னை மாகாணம் வந்துபோனதில் சுயராச்சியப்பிராமணர்கள் இரவும், பகலும் அவருடன் இணைபிரியாமலிருந்து உண்டிமுதலியவற்றால் வேண்டிய உபசாரங்கள் செய்து அவருடைய பரிசுத்தச் சிந்தையையும், தெய்வத்தன்மையையும் போக்கி வருணாசாரத்தருமமென்னும் சுமையைத் தலையில் தூக்கிவைத்து அவரும் சுமந்து திரியும்படியாய் வைத்துவிட்டார்கள். இத்தன்மையாய் நிகழ்ந்துவருங் காரியங்களில் நாம்யார்மூலமும் சாதகத்தைப்பெற்றுக்கொள்ள முடியாது.

சுமார் ஐம்பதுவருஷத்திற்குமுன் ஜப்பான்காரர்களை, ஐரோப்பாக்கண்டத்திலுள்ளவர்கள் மஞ்சள்குரங்கு என்றுசொல்லி ஏளனஞ்செய்த தூண்டு சமீபத்திலிருந்து ஜப்பானிலுள்ள மேதாவிகளால் பிரயத்தனங்கள் செய்யப்பட்டு அதுமூலமாய் அவர்கள் முன்னேற்றம் அடைந்து மஞ்சள் குரங்குஎன்ற ஏளனச்சொல்நீங்கி உலகத்திலுள்ள வல்லரசுகளில் சேர்க்கப்பட்டு உலகத்தில் அதிகச் சேனையோடிருந்த ரசியாவை முதுகுகாட்டி ஓடவுஞ் செய்திருக்கிறது ஜப்பானியர்கள் இந்தியாவிலுள்ள வியாபாரக்கடைகளில் வந்திருந்து கைத்தொழிற் சாமான்களில் எந்தச்சாமான்கள் அதிகமாய் விற்கிறதென்றும், எங்

விதத்தில் சனங்கள் பிடித்தமிருக்கிறதென்றும் தெரிந்து போவதும், அந்தப்பிரகாரமே சாமான்களைக் கொண்டுவந்து விற்பனை செய்து பணத்தைக்கொண்டுபோவது மாயிருக்கிறது. இதைப்பார்த்தமட்டிலாவது நாமும், நம்முடைய முன்னேற்றமான காரியங்களைக் கைப்பற்றிநடந்துகொள்ளுவோமானால் நம்மைப் பற்றிய ஏளனச்சொற்கள் நீங்கிப்போகவே கூடும்.

நம்மவர்களில் எவ்வளவு நாகரீகமும் மதப்பற்றும் உள்ளவர்களாயிருந்தபோதிலும் சிறிதுபாகத்திலுள்ள கோவில்களுக்குள் வரக்கூடாதென்ற கட்டுப்பாட்டிற்கு இணங்கியிருக்கும் சுவாமிகள் கிஞ்சித்தும் மதப்பற்றும், அனுதாபங்களும் இல்லாத அன்னிய நாட்டார்களை சிப்பாரிசுகள் செய்து கால்களில் பூட்சும், வாயில் சுருட்டு சகிதமும் தன்னண்டையில் வரச்செய்து அவர்களிடம் தங்களையும், தங்களுடைய கோவில் வாகனம் ஆடை ஆபரணமுதலானதுகளையும் காண்பித்து தங்களுடைய சரித்திரங்களையும், ஆஸ்திகளையும் சொல்லி தங்களுடைய டைரியில் அவர்களை ஏதாவது எழுதி வைக்கும்படி கேட்டு அந்தப்படி அவர்களால் எழுதிவைத்துப் போகக்கூடியதாகவும் இருந்துவருகிறது. நம்மவர்களும் எந்தநாட்டுக்காவது போய் எல்லாப்படிப்புக்களையும், தொழில்களையும்படித்து கௌரவமான பட்டங்களும் பெற்று பெரிய உத்தியோகஸ்தர்களாகவும், கோடிக்கணக்கில் பணமுள்ளவர்களாகவும் வருவோமானால் சனங்கள் ஒரு பிரயோசனத்தையும் அடையாமல் வீணாகக்கெட்டு மடிவதற்குக் காரணமான இந்தச்சுவாமிகளெல்லாம் நம்மையும் தன்னண்டைவரும்படி சிப்பாரிசுகள் மூலம் அழைக்கவே கூடும்.

அநேகவூர்களில் நடக்கும் பெரிய திருவிழாக்களைப் பற்றி ரயில்வேக்காரர்கள் சனங்கள் மயங்கும்படியான படங்கள் வரைந்தும், எழுதியும் சமாச்சாரப்பேப்பர்கள், துண்டுத்தாள்கள், சுவரொட்டுகள் மூலங்களால் பிரசித்தஞ் செய்யப்படுவதை முன்னிட்டு விட்டில் முதலான செந்துக்கள் தீபத்தின் சுடரை புஷ்பம் என்று எண்ணி அதில்ப்போய் விழுந்து மடிந்து போவதைப்போல், சனங்கள் அளவுக்கு மிஞ்சி திருவிழா நடக்கும் ஊர்களுக்குப்போய் தங்களுக்கும் அங்குள்ளவர்களுக்கும் இடைஞ்சலையும், கஷ்டத்தையும், சுகாதாரக் கெடுதல்களையும், பணநஷ்டத்தையும், தொற்றுவியாதிகளையும் உண்

டாக்கி அநேகர் மறித்துப்போகிறார்கள். ரயிலில் டிக்கட்டுகள் வாங்குவதிலும், கொடுப்பதிலும், வண்டியில் ஏறுவதிலும், இறங்குவதிலும், ரயிலில் இருப்பதற்கும் போதுமான சௌகரியங்கள் உண்டா? போனவிடங்களில் இருப்பதற்கு நல்ல வசதியுண்டா? வெயில் காற்று மழைபனிகளுக்குப் போதுமான மறைப்புக்கள் உண்டா? திருடர் துஷ்டர்களுடைய அக்கிரமங்களுக்கு அளவுகள் உண்டா? மலசலங் கழிப்பதற்குப் போதுமான ஒதுக்குகளாவது மரியாதிகளாவது உண்டா? குளிப்பதற்கும் குடிப்பதற்கும் போதுமான சுத்தமுள்ள தண்ணீர் உண்டா? உணவிற்கு நல்ல ஆகாரங்களாகக் கிடைப்பதுண்டா? இதற்குமேல் திருவிழாவில் சுவாமிகளிடம் எந்தவகையான சாதகத்தையும் பெற்றுக்கொள்ளுகிற தன்மைகளாவது உண்டா? ஒன்றுமேயில்லாமல் கஷ்ட நஷ்டத்திற்கும், அவமானத்திற்கும், ஆடு மாடுகளைப்போல் அவதிப்படுவதற்கும், வியாதிகளின் அவஸ்தைகளுக்கும் ஏதுக்களாகித் தீருகிறது. ரயில்வேக்காரர்கள் தங்களுடைய வருமானத்தை அதிகப்படுத்துவதற்காகவே விளம்பரங்கள் செய்கிறார்களே யொழிய சனங்கள் சுவாமிகளைப் போய்ப்பார்த்து பக்திபண்ணி வேண்டிய வரங்களைப் பெற்றுக்கொள்ளட்டுமென்ற நோக்கமல்ல. இந்தவாக்கியத்தினால் இம்மைக்கும், மறுமைக்கும் பிரயோசனமில்லாத வகையாய் நடந்துவரக்கூடிய தன்மைகளைப்பற்றிக் கண்டிக்கப்படுகிறதே யொழிய கடவுள் இல்லையென்றாவது, கடவுள் பக்தி வேண்டியதில்லையென்றாவது சொல்லப்படவில்லை.

காலப்பருவம் சனங்களுடைய முன்னேற்றமானது பந்தயத்தில் வைத்து முன்னோடிச் செயிப்பது போன்ற தன்மையாயிருக்கிறது. இப்படிக்கான சமயம் நாமும் நம்முடைய மகமைப்பணங்களைக் கொண்டு நம்மவர்கள் வசிக்கும் ஊர்கள்தோறும் பள்ளிக்கூடங்களும், தொழிற்சாலைகளும், முக்கியமான ஒரு இடத்தில் உயர்தரமான காலேசும் உண்டுபண்ணி நம்மவர்கள் பூராவும் போதுமான பிரகாரம்படித்தும், தொழிலைக் கற்றுக்கொள்ளவும் ஏற்பாடுகள் செய்து ஆயிரக்கணக்கானவர்களை அன்னியநாடுகளுக்கு அனுப்பி மேலான படிப்புக்களும், தொழில்களுங்கற்று பட்டங்களும் உத்தியோகங்களும் பெற்று வரும்படி செய்வதானால் சுமார் இருபது அல்லது முப்பது வருஷத்தில் நாம் எந்தவிதமான குறைச்சல்களும் இல்லாமல் மேலான வாழ்க்கையை அனுபவிக்கக்கூடும்.

தொழிற்சாலைகளை உண்டாக்கினால்த்தான் எல்லோருக்கு காலட்சேபத்திற்கு ஆதாரமாகக்கூடும். ஆரம்பத்தில் உண்டாக் கற்பித்துக் கொடுக்குந் தொழிற்சாலைகளில் ஆதாயத்தை எதி பார்க்கமுடியாது. எவ்வளவு படித்தபோதிலும் தொழில்கள் மூ மாகத்தான் பணத்தை அடையவேண்டும். தொழில் இல்லாதபோது எல்லாக்கஷ்டங்களும் வந்துசேரக்கூடும். இதனாலேதான் அவசி மாய் நம்மவர்களின் பொதுவில் பலவிடங்களிலும் தொழிற்சா களையும் உண்டாக்கி எல்லாத் தொழில்களையும் நம்மவர்களுக்கு க பித்துக்கொடுக்க வேண்டும். நம்மவர்களின் பணம் ஒருபைசாவா லும் அனாவசியத்திற்கும், ஆபாசத்திற்கும், அறியாமைகளுக்கு மற்றவர்களுடைய ஏமாற்றத்திற்கும் செலவாகாமல் கட்டுப்படுத் வேண்டும்.

எந்தக்காரியத்திற்கும் எதிர்ப்புகள் உண்டாவது சகசம். இ அனுசரித்து நம்மவர்களுடைய பழக்க வழக்கங்களை மாற்றிப்பு வழிகளில் திருப்பவேண்டியதிலும் பலவிதமான கஷ்டங்கள் உ டாகலாம். எல்லாவற்றிற்கும் நம்மில் முக்கியமானவர்களும், ந மகாசன சங்க உத்தியோகஸ்தர்களும், இதரசங்கங்களின் உத்தி கஸ்தர்களும் சகித்துக் கொள்ளுந் தன்மையுள்ளவர்களாயிருந் ரசாரங்கள் செய்துமுடிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது.

சுபம்! சுபம்!! சுபம்!!!

SACHITHANANDAM PRESS
PRINTING AND BINDING WORKS
VIRUDHUNAGAR